# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 08 அதிர்வு 85 ஆடி 2024 editor@ethiroli.com தொ.பே:1800 960 162













**ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்**

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டினொங்' இல்
புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au





# சுணங்கிய சுனக்

# ஓங்கிய தொழிலாளர் குரல்

● **ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி**

**நாள்தோறும் நாடி முறைசெய்யா மன்னவன்**
**நாள்தோறும் நாடு கெடும்.**

தன் நாட்டில் நிகழும் தீமைகளை நாள்தோறும் ஆராய்ந்து அதற்கு தக்க முறைமைகளைச் செய்யாத அரசன், நாள்தோறும் சிறிது சிறிதாக தனது நாட்டினை இழப்பான் என்பது இந்த திருக்குறளின் பொருளாகும். அது போலவே பிரிட்டனில் ஆட்சியிலிருந்த பழமைவாதக் கட்சி , தொடர்ந்து 14 ஆண்டுகளாக குடிமக்களுக்கு எந்த நன்மைகளும் செய்யாமல் ஜூலை மாதம் நடந்த தேர்தலில் படுதோல்வி அடைந்திருக்கிறது. இந்தத் தோல்வி இன்று, நேற்று நடந்ததல்ல. கடந்த 14 ஆண்டு கால மக்கள் விரோத ஆட்சியை மக்கள் வீட்டுக்கு அனுப்பியிருக்கின்றனர். "எதிர்க்கட்சிகள் தேர்தலில் வெற்றி அடைவதில்லை . ஆளும்கட்சிதான் பதவி இழக்கும்" என்பது ஆன்றோர் வாக்கு. பிரிட்டனில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கீர் ஸ்டார்மர் தலைமையிலான லேபர் கட்சி அறுதிப் பெரும்பான்மை வெற்றியைப் பெற்றுள்ளது. அங்கு மொத்தமுள்ள 650 இடங்களுக்கு பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதன் வாக்குகள் எண்ணப்பட்டன. அதில் லேபர் கட்சி 412 இடங்களில் வெற்றி பெற்றது. கன்சர்வேட்டிவ் கட்சி 121 இடங்களில் மட்டுமே வென்றது. ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மையுடன் லேபர் கட்சி வெற்றி பெற்றதை அடுத்து, அந்தக்கட்சியின் தலைவர் கீர் ஸ்டார்மர் பிரிட்டன் பிரதமராகப் பதவி ஏற்றார்.

பிரெக்சிட் (ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியேற்றம்), கோவிட் தொற்றுநோய் ஏற்படுத்திய பாதிப்புகள், அரசியல் குளறுபடிகள் பொருளாதார சீர்குலைவு மற்றும் பணவீக்கம் போன்ற பல்வேறு குழப்பங்கள் பழமைவாத ஆட்சியில் நடந்தன. ஒரே வருடத்தில் மூன்று பிரதமர்களை உருவாக்கியது இவர்களின் தனிப்பட்ட சாதனையாகும். ஐக்கிய ராஜ்ஜிய தேர்தலில் கன்சர்வேடிவ் தோல்விக்கான காரணங்கள் மிகச் சிக்கலானவை. சில முக்கியமான காரணங்கள் பின்வருமாறு

1. குடிமக்களின் அன்றாடச் செலவு அதிகரிப்பு : தேர்தலில் மக்களின் வாழ்வாந்திரச் செலவு முக்கியமான பிரச்சினையாக இருந்தது, மேலும் கன்சர்வேடிவ் கட்சியின் பொருளாதாரத்தைக் கையாண்ட விதம் பல்வேறு சராசரி ஐக்கிய ராச்சிய வாக்காளர்களை அதிருப்திக்குள்ளாக்கியது .

2. எரிசக்திக் கொள்கை: புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஊக்குவிப்பதற்காகவும், எரிசக்தித் திறனை ஊக்குவிப்பதற்காகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் கட்சியின் பின்னடைவு பல்வேறு வாக்காளர்களை குழப்பத்திற்குள்ளாக்கியிருக்கிறது

3. சர்வதேச நிகழ்வுகள்: உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு மற்றும் அதன் விளைவாக எரிசக்தி விலை அதிகரிப்பு ஆகியவை தேர்தலின் முடிவுகளை நேரடியாக பாதித்திருக்கின்றன.

4. காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை சீரழிவு : காலநிலை மாற்றம் மற்றும் இயற்கைப் பேரிடர் போன்ற சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் கன்சர்வேடிவ் கட்சி கவனம் செலுத்தாதது

பழமைவாத கட்சியினர் தோல்வியடைந்த அதே நேரத்தில் தொழிற்கட்சியின் மகத்தான வெற்றியின் காரணங்களையும் அலசவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது அவையாவன:

1. பழமைவாத கட்சியின் சரிவு ( உட்கட்சி குழப்பங்கள் )

2. பதவியை இழந்த பிரதமர் ரிஷி சுனக்கிற்கு மக்களிடையே செல்வாக்கற்ற நிலைமை

3. நைஜல் ஃபரேஜ் (Nigel Farage) சீர்திருத்த UK ( Reform UK) கட்சியானது வழமையான பழமைவாதக் கட்சியின் வாக்குகளை பிரித்தது

4. லிபரல் டெமாக்ராட்ஸ் மற்றும் பசுமைக் கட்சி (Greens ) போன்ற "மூன்றாம் அணி" வேட்பாளர்களுக்கான மொத்த வாக்குகளைப் பிரித்தது.

5. மொத்தத்தில் 14 ஆண்டுகள் நடந்த பழைமைவாதக் கட்சியின் ஆட்சியின் மேலிருந்த மக்களின் வெறுப்பு

6. சர் கீர் ஸ்டார்மர் தலைமையிலான புதிய தொழிற்கட்சி அரசாங்கம் இங்கிலாந்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற மக்களின் நம்பிக்கை

7. மிகச்சரியாக திட்டமிடப்பட்ட தொழிலாளர் கட்சியின் வாக்கு சேகரிப்பு. அதாவது தாங்கள் கண்டிப்பாக வெற்றி பெற முடியுமென்ற தொகுதிகள் மற்றும் பழைமைவாதக் கட்சியின் கோட்டையென கருதப்படும் தொகுதிகளில் அதிக கவனம் செலுத்தாமல் எங்கெல்லாம் மாற்றம் வரவேண்டிய வாய்ப்புகள் இருந்தனவோ அந்தத் தொகுதிகளில் முழுக் கவனம் செலுத்தியது.

8. ஸ்டார்மர் தனது மிக நெருங்கிய தொண்டர்கள் சிலருடன் பிரசாரத்தின் பெரும்பகுதியை சாலையில் கழித்தார். பொதுமக்களின் சந்தேகம் மற்றும் டோரி தாக்குதல்களைத் தவிர்ப்பதற்காக தேர்தல் அறிக்கையில் எந்தவிதமான புதிய கொள்கைகளையும் அறிவிக்க வேண்டாம் என்று முடிவெடுத்தது .

தொடர்ந்து நான்கு தேர்தல்களில் நான்கு பிரதமர்களை பிரிட்டனுக்கு அளித்துள்ள கன்சர்வேடிவ் கட்சியின் வெற்றிப் பயணம் இப்போது முடிவுக்கு வந்துள்ளது. தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி தோல்வியடையும் என்று ஏற்கெனவே எதிர்பார்த்தது தான் . ஆனால் இவ்வாறு படுதோல்வியடைவோம் என்று கட்சியின் மூத்த தலைவர்கள் கூட எதிர்பார்க்காததால் 2024 தேர்தல் முடிவுகளை குறித்து கருத்து ஏதும் சொல்லாமல் அமைதியாக இருக்கிறார்கள். கட்சியின் தோல்விக்கு எல்லோரும் ரிஷி சுனக்கையே காரணம் சொல்லலாம். ஆனால் அவர் ஒரு பலிக்கடா மட்டுமே. அவரது முன்னோடிகளான லிஸ் ட்ரஸ் மற்றும் போரிஸ் ஜான்சன் ஆகியோர் மக்களின் பொது நம்பிக்கையைச் சிதைத்து, பிரிட்டிஷ் பொருளாதாரத்தை வீழ்த்திய பின்னர் யாருமே கட்சியின் தலைவராகவும் நாட்டின் பிரதமராகவும் வருவதற்கு தயாராக இல்லாத சூழ்நிலையில் தான் ரிஷி பதவிக்கு வந்தார். நாட்டின் ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பேன் என்ற வாக்குறுதியுடன் 2022 இல் ரிஷி பிரதமராக பதவியேற்றார். 'லொக்டவுன் பார்ட்டிகள்' முதல் பாலியல் முறைகேட்டுக் குற்றச்சாட்டுகள் மற்றும் வட்டி விகிதங்களை உயர்த்துவது தொடர்பான மினி-பட்ஜெட் வரை பல்வேறு குற்றச்சாட்டுகள் கன்சர்வேடிவ் கட்சியின் செல்வாக்கை வெகுவாகப் பாதித்தன. போரிஸ் ஜான்சனும் இதுபோல சில சர்ச்சைகளுக்கு ஆளாகியிருந்தாலும், அவரைப் போல சுனக் அதே வழியில் வாக்காளர்களை வசீகரிக்கவில்லை என்று கட்சிக்குள்ளேயே பலர் அவரைக் குற்றம் சாட்டினர்.

இலையுதிர் காலத்தில் தேர்தல் நடத்தப்படும் என்று எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறு ஒக்டோபர் அல்லது நவம்பர் மாதங்களில் தேர்தல் நடந்திருந்தால் கன்சர்வேடிவ் கட்சிக்கு எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியை வீழ்த்த கால அவகாசம் அதிகமாக இருந்திருக்கும் . மேலும் சிதைந்த பொருளாதாரத்தை மேம்படுத்த ரிஷிக்கு மேலும் அதிகமான கால அவகாசம் கிடைத்திருக்கும். ஆனால் இப்படியெல்லாம் யோசிக்காமல் ரிஷி சுனக் முன்னதாகவே பொதுத் தேர்தலை நடத்தியதே கட்சியின் படுதோல்விக்கு காரணமென அரசியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். புதிய பிரதமராகப் போகும் கியர் ஸ்டார்மர் "சுகாதாரம் , குடியேற்றம் , கல்வி , வீட்டுவசதி ஆகிய மக்களை நேரடியாக பாதிக்கும் துறைகளில் மாற்றம் கொண்டுவருவேன் " என்று சொல்லியிருக்கிறார். ஐக்கிய ராஜ்ஜிய அரசியல் வரலாற்றிலேயே அதிக அளவில் பெண்கள் ராஜாங்க மந்திரிகளாக பதவியேற்பது இதுவே முதல்முறை. இந்த தேர்தலில் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த பிரித்தானியத் தமிழரான உமா குமரன், 19,145 வாக்குகளைப் பெற்று, ஸ்ட்ராட்ஃபோர்ட் மற்றும் போ தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தகுந்தது.

தோல்விக்கு பொறுப்பேற்று கன்சர்வேடிவ் தலைவர் பதவியை ராஜினாமா செய்வதாக சுனக் உறுதி அளித்துள்ளார். அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான பணிகள் முடிந்த பிறகு தாமே விலகிவிடுவதாகக் கூறியுள்ளார். ஒரு அரசியல்வாதியாக சுனக் வேகமாக மிக வேகமாக பதவியில் உயர்ந்தார். அவர் 2015 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியின் கோட்டையான வடக்கு யார்க்ஷயரில் உள்ள ரிச்மண்ட் தொகுதியில் போட்டியிட்டு எம்.பி ஆனார். ஐந்தே வருடங்களில் அப்போதைய பிரதம மந்திரியான போரிஸ் ஜான்சனின் ஆலோசனைக் குழுவில் இணைந்து 2020 பெப்ரவரியில் நிதியமைச்சராக பதவி உயர்வு பெற்றார். பிறகு கட்சியில் நடந்த குழப்பங்களையடுத்து ஒக்டோபர் 2022 இல் பிரதமராக பதவியேற்றார். அதாவது அரசியலுக்கு வந்த ஏழே வருடங்களில் பிரதமரானார். உயரே மேலே சென்ற எதுவும் கீழே வரவேண்டுமென்பது இயற்பியல் விதி. ஆனால் எல்லோருக்கும் கொஞ்ச காலம் எடுக்கும். ரிஷிக்கோ அதல பாதாளம். நதி மூலம் ரிஷி மூலம் பார்க்கக் கூடாது என்பார்கள். இப்பொழுது ரிஷிக்கு நிர்மூலம். ■

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

ஆடி 2024

# அணுவைத் துளைத்து பெருகத் தரித்த டட்டன்

உங்களால் ஒருவரை நம்பவைக்கவோ / சமாதானம் செய்யவோ முடியவில்லையென்றால் அவர்களை முடிந்த வரை குழப்பி விடுங்கள் "என்பது மேலாண்மையில் சொல்லித் தரப்படும் அடிப்படைச் சூத்திரம். எனக்கு தெரிந்து இதை நன்றாக பயன்படுத்துபவர்கள் முன்னேறுகிறார்களா என்று தெரியவில்லை. ஆனால் முடிந்தவரை தங்களது பதவியை தக்கவைத்துக் கொள்ள மிக நன்றாகவே பயன்படுத்தும் புத்திஜீவிகளை எனது பணியிடங்களில் பல இடங்களில் பார்த்திருக்கிறேன். அரசியலிலும் ஏராளமான உதாரணங்களை கைகாட்ட முடியும். ஆனால் நமது எல்லோருக்கும் தெரிந்த குழப்பவாதி மாண்புமிகு டட்டன் இதற்கு மிகச்சிறந்த உதாரணம். இவர் எதிர்க்கட்சி தலைவரானது கூட ஒரு குழப்பமான சூழ்நிலை தான்.ஆலையில்லா ஊரில் இலுப்பைப்பூ தான் சக்கரை என்பது போல, கூட்டணிக்கட்சியின் தலைவர் பொறுப்பேற்க வேறு யாருமில்லாத நிலையில் பழம் நழுவி பாலில் விழுந்தது போல இவருக்கு கிடைத்தது. அன்று முதல் இன்று வரை ஆஸ்திரேலிய ஊடகங்களுக்கு இவரால் தினமும் பரபரப்பான செய்திகளை வழங்க முடிகிறது. குரல் வாக்கெடுப்பு தொடங்கி எல்லா முக்கியமான விடயங்களிலும் தொடர்ந்து வேண்டுமென்றே எதிர்நிலையை தேர்ந்தெடுப்பேன் என்பது இவரது பிடிவாதம்.

இப்படியாக எல்லாக் குழப்பங்களினதும் குத்தகைவாதியான நமது பீட்டர் டட்டனும் அவரது லிபரல் நேஷனல் கூட்டணியும் வரவிருக்கிற மத்திய ( பெடரல்) தேர்தலில் வெற்றி பெற்றால், ஆஸ்திரேலியாவிலுள்ள மாகாணங்களில் மொத்தம் ஏழு அணு உலைகளை நிறுவுவோம் என்று கூறியுள்ளனர்.

இந்த உலைகளில் முதல் இரண்டு உலைகள் 2035 முதல் 2037 வரையான காலகட்டத்தில் செயல்பாட்டிற்கு வரும் என்று அணுஉலை நிபுணரான நமது பீட்டர் டட்டன் கூறுகின்றார். இது நடைமுறையில் சாத்தியமில்லை என்று CSIRO அணு ஆற்றல் நிபுணர்கள் கூறியுள்ளனர். தேர்தலில் வெற்றிபெற்றால் கூட்டணி அரசாங்கம் இந்த அணு உலைகளை கட்டுவதற்கும், இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் தேவையான மொத்த செலவையும் பொதுமக்களின் வரிப் பணத்தை பயன்படுத்துவோம் என்கின்றனர் . இந்த அணு உலைகளை கட்டுவதற்கு எவ்வளவு செலவாகும் என்பது குறித்த எந்த விவரங்களையும் அவர்கள் தெரிவிக்கவில்லை. ஏனென்றால் அவர்களுக்கு சர்வ நிச்சயமாக தெரியாது .சில அணு சக்தி நிபுணர்கள் இந்த உலைகளை கட்டுவததற்கு குறைந்த பட்சம் $100 பில்லியன் டொலர் வரை செலவாகும் என்று கணித்துள்ளனர். இந்த அணுசக்தி திட்டத்திற்கு அதாவது 2050 ஆம் ஆண்டுவரையிலான பராமரிப்பு செலவு குறைந்தது 600 பில்லியன் டொலர் செலவாகும் என்றும் அப்படி எடுக்கப்படும் அணுஉலை மின்சாரமானது ஆஸ்திரேலியாவின் தேவையில் 3.7% மட்டுமே வழங்க முடியும் என்றும் பகுப்பாய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன . அதாவது கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்த கதை தான் .

கூட்டணி அரசாங்கத்தின் தொ(ல்)லைநோக்கு மின் ஆற்றல் திட்டமானது பல கேள்விகளுக்கு பதிலளிக்கவில்லை, அதாவது :

1. இந்த அபாயகரமான அணு உலைகளுக்கு அருகில் வசிக்கும் மற்றும் உலைகளில் பணிபுரியும் மக்களின் பாதுகாப்பு எவ்வாறு உறுதி செய்யப்படும்?

2. இந்த அணுஉலைகளின் கழிவுகள் எங்கே, எப்படி மற்றும் எவ்வாறு யாருக்கும் தீங்கு விளைவிக்காதவாறு சேமிக்கப்படும்?


3. பெரும்பாலான மாகாண அரசுகள் அணுசக்திக்கு எதிராக தடைகளை விதித்திருக்கின்றன. அவ்வாறான மாநில அரசின் தடைகளை மத்திய அரசு எப்படி முறியடிக்கும்?

அது மட்டுமல்ல இந்த ஆற்றல் திட்டமானது இன்னும் பாதகமான காலநிலை மாசுபாட்டுக்கு வழிவகுக்கும் என்பது நாம் எல்லாரும் அறிந்த ஒன்று அல்லவா . எத்தனையோ ஐரோப்பிய நாடுகள் அணு உலைகளின் தீங்கினை கருத்தில் கொண்டு தொடர்ச்சியாக அணு உலைகளை மூடி வருகின்றன.

கூட்டணியின் இந்த திட்டம் நீண்ட காலத்திற்கு பாரதூரமான காலநிலை மாற்றத்திற்கு வழிவகுக்கும் . ஏனென்றால், அணு உலைகள் 2040 ஆம் ஆண்டுவரை செயல்பாட்டிற்கு வர முடியாது, அதுவரை நிலக்கரியில் இயங்கும் சில மின் உற்பத்தி நிலையங்களை அதிக நேரம் இயங்க வைப்பதாகவும், மேலும் நமது மின் கூடங்களில் அதிக எரிவாயுவினை பயன்படுத்தவும் அனுமதி வழங்குவோம் என்று பீட்டர் டட்டன் கூறுகிறார். மின்சாரத்துக்காக நிலக்கரி மற்றும் எரிவாயுவை எரிப்பதால் அதிக அளவு பருவநிலை மாசுபாடு ஏற்படுகிறது. இந்த மாசுபாடுகளின் விளைவாக ஏற்கனவே காட்டுத்தீ, வெள்ளம் மற்றும் கடுமையான புயல்கள் போன்ற இயற்கை பேரழிவுகள் கடந்த ஆண்டுகளில் அதிகரித்து வருகின்றன. இப்போது இவரது திட்டத்தினால் 2040 ஆம் ஆண்டு மேலும் நிலக்கரி மற்றும் எரிவாயுவினை எரிப்பது அதிகரிப்பதால் அதிக காலநிலை மாசுபாடு சிக்கலை ஏற்படுத்தப் போகிறது என்பது உறுதி.

பீட்டர் டட்டனின் கொள்கைகள் ஏற்கனவே அவர் எந்த விஷயத்திலும் நன்கு ஆராய்ந்து முடிவெடுப்பவர் அல்ல அறுவைசிகிச்சைக்கு கடப்பாரையை எடுக்கும் பண்பாளர் என்பதை நமக்கு பறைசாற்றுகின்றன. அவர் காலநிலை





ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

மாற்றத்திற்கு தேவையான ஆஸ்திரேலியாவின் 2030 இலக்கை கிழித்து எறிவதாகவும், 2040களில் காலநிலை மாசுபாட்டைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை தாமதப்படுத்துவதாகவும் உறுதியளித்துள்ளார்.இந்த தடாலடி முடிவுகள் நமது எதிர்கால சந்ததிகளை பாதுகாக்க தேவையான குறைந்தபட்ச நடவடிக்கையெதனையும் டட்டன் எடுக்கப் போவதில்லை என்பதையே காட்டுகின்றன. நமது தற்போதைய "2050 க்குள் நிகர பூஜ்யம்" என்பது மற்ற உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது போதிய அளவில்லாத காலநிலை இலக்கு என்பது நாம் அனைவரும் அறிந்ததே. பீட்டர் டட்டனின் இந்த மின்சக்தி திட்டத்தினால் ஆஸ்திரேலியா இந்த இலக்கை அடைய வாய்ப்பேயில்லை. எதிர்க்கட்சித் தலைவரான பீட்டர் டட்டன், தனது அணுசக்தித் திட்டம் பொருளாதார மற்றும் எரிசக்தி பாதுகாப்பை "இன்னும் 80, 100 ஆண்டுகள் வரை" உறுதியடையச் செய்யும் என்று கூறுகிறார் - ஆனால் பிரதம மந்திரி அந்தோனி அல்பானீஸ் அவர்களோ எதிரணியரின் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட யோசனை " 24 மணி நேரத்திற்குள் பல்லை காண்பித்துவிட்டது " என்று கூட்டணி கட்சியின்குழப்பநிலையை பார்த்து கேலி செய்தார்.

இந்த திட்டத்தினால் ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கும் இயற்கையாக மறுசுழற்சி முறையில் மின்சாரம் தயாரிப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் மீது கடுமையான மற்றும் ஆபத்தான முட்டுக்கட்டை ஏற்படும் என்று வல்லுநர்கள் கருதுகிறார்கள் . இன்று நமது தேசிய மின்கட்டமைப்பில் சுமார் 40% மின்சாரமானது காற்று மற்றும் சூரிய ஒளி போன்ற புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களில் இருந்து வருகிறது. ஆஸ்திரேலியா முழுவதும் மூன்றில் ஒரு வீடு ஏற்கனவே மேற்கூரையில் சூரிய ஒளிசக்தி மின்சாரத் தகடுகளை கொண்டுள்ளது, மேலும் ஒவ்வொரு நாளும் கூடுதலாகச் சேர்க்கப்படுகிறது. அடுத்த 10 ஆண்டுகளுக்குள் புதுப்பிக்கத்தக்க சக்திகளால் முழுமையாக மின்சாரத்தை அதாவது 100 சதவிகித அளவிற்கு உருவாக்க தேவைப்படும் செயல்களை நாம் துரிதப்படுத்தலாம். அத்தகைய செயல்களை செய்தால் போதும். நாம் 2040ஆம் ஆண்டு வரை டட்டனின் அணு உலைகளுக்காக காத்திருக்க வேண்டியதில்லை.

நியூ சவுத் வேல்ஸ் பிரதமர் கிறிஸ் மின்ன்ஸ் தனது அரசாங்கம் அணுசக்தி மீதான தடையை ரத்து செய்யாது என்பதை "தெளிவுபடுத்த" விரும்புவதாக கூறினார். விக்டோரியா மற்றும் குயின்ஸ்லாந்தின் முதல்வர்களும் இதை கருத்தையே கூறுகின்றார்கள். இந்த விமர்சனத்திற்கு பதிலளித்த டட்டன் " மாநில முதல்வர்களுடன் மரியாதையுடன் மற்றும் ஒத்துழைப்புடனும் பணியாற்றுவேன். ஆனால் நான் அவர்களுக்கு பணி செய்யவேண்டியவன் நான் அல்ல. நான் எடுக்கும் முடிவுகள் ஆஸ்திரேலிய மக்கள் மற்றும் நமது தேசிய நலனுக்காக இருக்கும்" என்றும் கூறினார். மேலும் "காமன்வெல்த் சட்டங்கள் மாநில சட்டங்களை விட மேலானது . எனவே மாநில அளவிலான அரசாங்க ஆதரவு அல்லது எதிர்ப்பு எங்கள் புதிய அணுசக்தி ஆற்றல் அமைப்பை உருவாக்குவதைத் தடுக்க முடியாது" என்று இறுமாப்புடன் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதில் கூறினார் .

அமெரிக்காவில் டொனால்ட் டிரம்ப் வளர்ச்சி , பிரான்சில் தீவிர வலது சாரி சக்திகளின் அரசியல் முன்னேற்றம், இங்கே நமது நாட்டில் தீவிர வலதுசாரி குழப்பவாதி டட்டன் என்று உலகமெங்கும் அதிகரித்துவரும் வலதுசாரி சிந்தனைகளின் ஆதிக்கத்தை பார்க்கும்பொழுது உள்ளம் நடுங்குகிறது. இங்கே டட்டன் ஆட்சி அதிகாரத்தை பெற்றுவிடாமல் நாட்டின் நலத்தினை பாதுக்காக்கும் பொறுப்பு மக்களிடையே தான் இருக்கிறது. பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும், காலம் பதில் சொல்லும் வரை.












# தசாப்தத்தை நோக்கிய பயணத்தில் எதிரொலி

ஊடக உலகில் தமிழ் வாசகர்களின் மனங்களை வென்று தனக்கென தனித்துவமானதொரு இடத்தை தக்கவைத்துக்கொண்டுள்ள எதிரொலி 8ஆவது ஆண்டில் காலடி வைத்துள்ளது. ஊடக அறம் மாறாது, புதுமைகளுக்கு வழிவிட்டு, பழமைகளையும் பாதுகாத்தபடி பயணத்தை தொடரும் எதிரொலிக்கு வாசகர்கள் வழங்கிவரும் பேராதரவால்தான் தசாப்தத்தை நோக்கிய பயணம் சாத்தியமாகியுள்ளது.

எனவே, எதிரொலியின் வீறுநடை தொடர அன்றும் இன்றும் என்றும் பக்க பலமாக இருக்கும் வாசகர்கள், விளம்பரதாரர்கள், நலன்விரும்பிகள், விநியோகஸ்தர்கள், விற்பனையாளர்களுக்கு முதலில் இருகரம் கூப்பி நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன், எதிரொலியோடு 8 வருடங்களாக பயணித்துக்கொண்டிருக்கும் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், பக்கவடிவமைப்பாளர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கும் நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

இன்றைய நவீன உலகில் அச்சு ஊடகங்களின் எதிர்காலம் முடிவை நோக்கியே பயணிக்கின்றது. நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த பத்திரிகைகள்கூட தனது பயணத்தை நிறுத்திக்கொண்டுள்ளது. எனவே, பல்வேறு சவால்களுக்கு மத்தியில் 7 ஆண்டுகள் கடந்து வந்ததே பெரும் சாதனைதான். எதிரொலியில் பிரசுரமாகும் ஆக்கங்கள் வாசகர்கள் மனதில் இடம்பிடித்துள்ளன என்பதையே இது பிரதிபலிக்கின்றது.

ஊடகங்களில் அச்சு ஊடகத்துக்கென தனி மதிப்பு உள்ளது. பொறுப்பு வாய்ந்த, பொறுப்புகூறக் கூடிய ஊடகமாகவும் அது திகழ்கின்றது. வரலாற்று சான்றாகவும் பேணி பாதுகாக்ககூடிய ஆவணமாகவும் அது உள்ளது. எனினும், இன்று மின்னிதழ் என்ற போர்வையில் பல நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் வெளிவருகின்றன. அவற்றின் நம்பகத்தன்மை, பொறுப்புகூறும் தன்மை, பின்னணி என்பன கேள்விக்குறியாகவே இருந்துவருகின்றன. சில தரமான மின்னிதழ்களும் வெளிவருகின்றன என்பதை ஏற்கவேண்டும்.

இந்நிலையில் தமிழ் மாத இதழொன்று ஆஸ்திரேலியாவில் ஏழு வருடங்கள் – அதுவும் ஊழல், மோசடிகளை எல்லாம் அம்பலப்படுத்திக்கொண்டு உண்மையின் வழியில் பயணிப்பது அவ்வளவு எளிதான விடயம் அல்ல. அது பலப்பரீட்சையாகும்.

மாற்றம் ஒன்றே மாறாதது, அந்தவகையில் வாசகர்களால் முன்வைக்கப்பட்ட சில ஆலோசனைகளையும் ஏற்று, மேலும் பல தகவல்களையும் உள்ளடக்கி, மக்களின் தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக 8 ஆவது ஆண்டிலும் எதிரொலி கம்பீரமாக பயணிக்கும் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம்.

வாசகர்கள், விளம்பரதாரர்கள், எழுத்தாளர்களின் ஒத்துழைப்பு, பேராதரவு தொடர்ந்து கிட்டும் என உறுதியாக நம்புகின்றோம்.





# சம்பந்தன்: கரை சேராத படகு விட்டுச் செல்லும் கேள்வி

● கருணாகரன்

ஈழத்தமிழர்களின் மூத்த அரசியற் தலைவரான இரா. சம்பந்தன், 91 ஆவது வயதில் (30.06.2024) மறைந்திருக்கிறார். அவருடைய மறைவுக்கு பல்வேறு தரப்பினரும் இரங்கலைத் தெரிவித்துள்ளனர். இலங்கைச் சூழலுக்கு அப்பால் இந்தியத் தலைவர்கள், அமெரிக்கத்தூதர் உட்படப் பலரும் இரங்கல் கூறியுள்ளனர்.

சர்வதேச அளவில் அறியப்பட்ட இலங்கைத் தலைவர்களில் முதன்மையானவர் சம்பந்தன். தமிழ்த்தலைவர்களில் முக்கியமானவர். ஏன் மூத்தவரும் கூட. இலங்கைச் சூழலில் அது அபூர்வம்.

கடந்த நாற்பது ஆண்டுகால இலங்கை அரசியற் களம் என்பது தமிழ், சிங்களம், முஸ்லிம் என எந்தப் பாரபட்சமுமின்றிக் கொலை அரங்காகவே இருந்தது. அதிற் தப்பிப் பிழைத்தோர் மிகச் சொற்பம். தப்பியோரில் சம்பந்தனும் ஒருவர். இவ்வளவுக்கும் சம்பந்தனுடைய அரசியல் நிலைப்பாடும் பயண வழியும் பலருக்கும் ஏற்புடையதாக இருந்ததல்ல. இலங்கை அரசு, தமிழ் இயக்கங்கள், இந்தியா என முக்கோண அபாயங்களுக்கும் எதிர்ப்புக் கண்ணிகளுக்கும் இடையில் நிகழ்ந்தது. இதற்குள்தான் அவர் தன்னை நிலை நிறுத்தி, தமிழ் அரசியலின் தலைவரானார்.

சம்பந்தனின் மறைவையொட்டிப் பல்வேறு வகையான உணர்வலைகளும் விமர்சனங்களும் பொதுவெளியில் காணப்படுகின்றன. இவை ஒன்றும் புதியவை அல்ல. சம்பந்தன் உயிரோடிருந்த காலத்திலேயே முன்வைக்கப்பட்டவை; வெளிவந்தவை. அவரும் இதைப்பற்றியெல்லாம் நன்றாக அறிந்திருக்கிறார். ஆனால், எதைப்பற்றியும் அலட்டிக் கொள்ளாமல் அவர், தன்னுடைய நிலைப்பாட்டிலேயே உறுதியாக நின்றார். இறுதிவரையிலும் அந்த உறுதிப்பாட்டிலேயே அவருடைய கவனமிருந்தது. என்னதான் விமர்சனங்களும் மறுப்புகளும் இருந்தாலும் அவரை மிஞ்சி நிற்பதற்குப் எவராலும் முடியவில்லை. அந்தளவுக்கு தலைமைத்துவ ஆளுமையைக் கொண்டிருந்தார். அவருடைய இயல்பும் அடையாளமும் அதுவேதான். இன்று மட்டுமல்ல, எதிர்காலத்தில் சம்பந்தனுக்கு கிடைக்கப்போகும் இடமென்பதும் அவருடைய அந்தத் தெளிவான, உறுதியான நிலைப்பாட்டுக்கே உரியது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஆயுதப்போராட்டத்தின் மூலமே தீர்வு காண முடியும் என்று தமிழ் இளைஞர்கள் 1970 களில் ஆயுதமேந்தியபோது, அந்த அரசியல் முறைமைக்கு வெளியே நின்றவர் சம்பந்தன். அப்பொழுது அவர், அ. அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர். அமிர்தலிங்கம் கூட இயக்கப் போராளிகளோடு ஒரு எல்லைவரையிற் சுமுக உறவைக் கொண்டிருந்தார். சம்பந்தனோ அதற்கு வெளியிலேயே எப்போதுமிருந்தார். இதற்குப் பிரதான காரணம், சம்பந்தனுக்கு வன்முறையில் உடன்பாடின்மையாகும். ஒடுக்குமுறைக்கோ, விடுதலைக்கோ வன்முறை பயனளிக்காது என்பது அவருடைய ஆழமான நம்பிக்கை. அந்த நம்பிக்கையின் வழியிற்தான் அவருடைய அரசியற் பயணம் தொடர்ந்தும் நிகழ்ந்தது.

ஆனாலும் அவர் பின்னாளில் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ, புளொட் என்ற ஆயுதமேந்திய தரப்புகளோடு கூட்டு வைத்துச் செயற்பட வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இதற்கப்பால் விடுதலைப்புலிகளோடும் சமரசம் செய்ய நேரிட்டது. பின்னர் இவையெல்லாவற்றிலிருந்தும் தன்னைத் தவிர்த்து வேறாக்கவும் வேண்டியிருந்தது. பின்னாளில் அதையே சம்பந்தன் செய்தார்.

இதனாலேயே அவர் மீதான விமர்சனங்களும் கடுமையாக இருந்தன; இருக்கின்றன. இப்பொழுது அவருடைய மறைவுக்குப் பிறகும் அவை இந்த அடிப்படையில்தான் எழுப்பப்படுகின்றன. இதற்குக் காரணம், அவர் தமிழ்த்தேசியவாதியாக இருந்தாலும் அதைத் தீவிர நிலையில் முன்னெடுக்க விரும்பவில்லை. அது பயனற்றது. நிலைமையை மேலும் சிக்கலடையச் செய்யும் என்று கருதியதே ஆகும். குறிப்பாக விடுதலைப் புலிகளுக்குப் பிந்திய (2009 க்குப் பின்னரான) போருக்குப் பிந்திய அரசியலை மேற்கொள்வதாக இருந்தால் அதனை மென்போக்கில்தான் முன்னெடுக்க முடியும். புலிகளைக் கடந்தே நிற்க வேண்டும் எனக் கருதினார். அத்துடன் இலங்கைத் தீவின் யதார்த்தத்தையும் தமிழ் மக்களுடைய நிலைமையையும் சர்வதேச சமூகத்தின் உளநிலையையும் ஓரளவுக்குச் சரியாகப் புரிந்து கொண்டிருந்தார்.

இந்தப் புரிதலோடு முன்னெடுக்கப்படும் அரசியலில் பலவிதமான நெருக்கடிகளும் சவால்களும் வருமென்றும் சம்பந்தனுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. என்றாலும் அதைக் கையாள்வதில், அதற்கான கட்டமைப்பை உருவாக்கிப் பேணுவதில் அவர் தவறிவிட்டார். சிங்கள, முஸ்லிம் தரப்புகளிடத்தில் நல்லெண்ணத்தை உருவாக்கும் சமநேரத்தில் தமிழ்தரப்பை ஒருங்கிணைத்துப் பலமாக வைத்திருக்க வேண்டும் என்பதில் அவர் தவறினார். தன்னுடைய தலைமைத்துவத்துக்குள்ளிருந்த கடும்போக்காளர்களைக் கையாள்வதற்குப் பதிலாக அவர்களை அவர் வெளியே விட்டார். இது அவர் மேற்கொள்ள முயன்ற மென்னிலைத் தேசியவாதத்தை நெருக்கடிக்குள்ளாக்கியது. இறுதியில் அவருடைய தமிழரசுக் கட்சியையே எரியும் நெருப்பில் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இருந்தாலும் அவர் தளம்பாமல் மென்போக்கினைக் கடைப்பிடித்தார். கூடவே தன்னுடைய மென்போக்கை வலுப்படுத்தக் கூடியவர்களையும் சேர்த்துக் கொண்டார். அப்படிச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களே சுமந்திரன், விக்னேஸ்வரன், சி.வி.கே. சிவஞானம், குகதாசன், சாணக்கியன் போன்றோர். இவர்கள் எல்லோரும் பின்னாட்களில் சம்பந்தனுக்குத் தனிப்படவும் அரசியல் ரீதியாகவும் நெருக்கடியைக் கொடுக்கும் தெரிவுகளை மேற்கொண்டனர். இருந்தாலும் அவர் தளர்ந்து விடவில்லை.

இதனால்தான் அவருக்கு இலங்கையில் தமிழரல்லாத பிற சமூகத்தினர் மத்தியிலும் சர்வதேச சமூகத்திலும் தனியாக மதிப்புண்டு. சம்பந்தன் அளவுக்கு இத்தகைய மதிப்பைப் பெற்ற வேறு எந்தத் தமிழ்த் தலைவர்களும் இப்பொழுது இல்லை. தமிழ்ப்பரப்பில் மட்டுமல்ல, நாடு முழுவதிலும் கூட சமாதானத்துக்கான விட்டுக் கொடுப்புகளையும் ஏற்றுக் கொள்ளல்களையும் செய்ய முன்வந்த வேறு சிங்கள, முஸ்லிம் தலைவர்களும் இல்லை. இது சம்பந்தனுடைய மரணத்துக்குப் பின்னர் கூறப்படுகின்ற மிகையான பாராட்டுக்கூற்றல்ல. வரலாற்றில் நிகழ்ந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்ட நிரூபணம்.

தமிழ்த்தேசிய அரசியலில் தெளிவான இருவழிப்பாதைகள் உருவாகிவிட்டன. ஒன்று, தீவிரத் தமிழ்த்தேசியம் என்ற கடும்போக்கு. இது புலிகளையும் அதற்கு முன்னரான தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் போக்கையும் ஆதரிக்கும் தரப்பினருடையது. எந்த நிலையிலும் சிங்களத் தரப்புடன் சமரசத்துக்கு உடன்பட முடியாது, அதை நம்ப முடியாது என்ற நிலைப்பாட்டை உடையது. கஜேந்திரகுமார், சுரேஸ் பிரேமச்சந்திரன், சிறீதரன், மாவை, சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா போன்றோர் இந்தத் தரப்பைச் சேர்ந்தோர். மற்றது, சம்பந்தன் வழியிலான மென்போக்கு.

இது ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வு என்ற அடிப்படையிலானது. இதனை வலியுறுத்தும் விதமாகவே - இதற்கான அடையாளமாகவே - சம்பந்தன் யாழ்ப்பாணத்தில் வைத்து இலங்கையின் தேசியக் கொடியை (சிங்கக் கொடியை) ஏந்தினார். கூடவே முஸ்லிம்களை அரவணைத்துச் செல்ல வேண்டும் என்ற அடிப்படையில் முஸ்லிம்களுடனான குறைந்த பட்சப் புரிந்துணர்வுக்கான தொடர்பாடல்களையும் தொடங்கியிருந்தார்.

இந்த நற்சமிக்ஞையை சிங்களத் தரப்பும் முஸ்லிம்களும் விளங்கிக் கொண்டு தீர்வை நோக்கிச் செயற்பட்டிருக்க வேண்டும். அப்படிச் செயற்பட்டிருந்தால் இலங்கையை பல வகையிலும் முன்னகர்த்தியிருக்க முடியும். அதன் மூலம் சம்பந்தனையும் அவருடைய வழிமுறையையும் பலப்படுத்தியிருக்கலாம். ஆனால், அப்படி ஏதும் நிகழவில்லை. பதிலாக சம்பந்தனுடைய நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் சிதைத்துத் தோற்கடிக்கும் விதமாகவே சிங்கள அதிகாரத் தரப்புச் செயற்பட்டது.

அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும்போது இணக்கப்பாட்டையே கடைப்பிடிக்க வேண்டியிருக்கும். அந்த இணக்கப்பாட்டை தோல்வியின் சரணடைவாகக் கருதக் கூடாது. ஆனால், அப்படித்தான் சிங்களத் தரப்பு கருதி சம்பந்தனை ஏளனப்படுத்தியது.

அதேவேளை இனவாதம் என்பது இணக்கப்பாட்டுக்கு எதிரானது. என்பதால் தன்னுடைய இணக்கநிலைக்காக இரண்டு (தமிழ் - சிங்கள) தீவிரத் தேசியவாதத்துக்கும் எதிராக நின்று தாக்குப் பிடிக்க வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தத்தை ஏற்க வேண்டிய நிலை சம்பந்தனுக்கு ஏற்பட்டது. இதனால் இரு தரப்பினராலும் அவர் துரோகியாகச் சித்திரிக்கப்பட்டார். இதுபோன்ற அவலம் வேறு எவருக்கும் ஏற்படத்தில்லை. இருந்தும் அந்த நிர்ப்பந்தத்தை அவர் தன்னுடைய முதிய வயதிலும் ஏற்று நின்றதனாலேயே அவருக்கு ஜனநாயக சக்திகளிடத்திலும் முற்போக்காளரிடத்திலும் மதிப்பும் ஆதரவும் கிடைத்தது. இதுவே அவர் சர்வதேச சமூகத்தின் மதிப்பையும் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கும் காரணமாக அமைந்தது.

உண்மையில் இதனால் சம்பந்தனோ அவருடைய வழிமுறையோ தோற்கடிக்கப்படவில்லை. பதிலாக சிங்களத் தரப்பும் சர்வதேச சமூகமுமே தோற்று நிற்கின்றன. வரலாற்றில் இதற்கு அவை தலைகுனிந்தே ஆக வேண்டும். (இப்பொழுது சம்பந்தனின் மறைவையொட்டிய சிங்களத் தரப்பின் தனிப்பட்ட உரையாடல்களில் இதற்கான அதனுடைய குற்றவுணர்ச்சியை அவதானிக்க முடிகிறது).

ஏனென்றால், ஒடுக்குதலுக்குள்ளான மக்களுடைய வலிகளின் மத்தியில் நின்று கொண்டே சம்பந்தன் சமாதானத்துக்கான - நீதியான தீர்வுக்கான - கைகளை நீட்டினார். அதைப் பற்றிக் கொள்ளாத தவறுக்காக சிங்களத் தரப்பு பொறுப்புரைத்தே ஆக வேண்டும்.

புலிக்கொடியுடன் வாழ்ந்த தமிழர்களுக்கு சிங்கக் கொடியைச் சம்பந்தன் ஏந்தியது ஏற்புடையதாக இருக்கவில்லை. இதனால் பெருந்திரள் தமிழ்ச் சமூகத்திடமும் தன்னுடைய கட்சிக்குள்ளும் கடுமையான எதிர்ப்பையும் விமர்சனங்களையும் அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இருந்தபோதும் அவர் தன்னுடைய நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கவில்லை.

(08ஆம் பக்கம் பார்க்க)








**சர்வதேச அகதிகள் தினத்தையொட்டி கடந்த மாதம் 22 ஆம் திகதி மெல்பேர்னின் தென்கிழக்கு பிராந்தியத்தில் அமைந்துள்ள குடிவருவோர் ஆதரவு நிலையத்தால் (Southern Migrant and Refugee Centre) springval நகர மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் நிலையத்தின் உப தலைவர் விக்கி விக்கிரமசிங்கம் மற்றும் டன்டிநொங் நகர சபையின் உதவி நகர பிதா ரிச்சாட் ஆகியோருடன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.**

# சம்பந்தன்: கரை சேராத படகு விட்டுச் செல்லும் கேள்வி

**(07ஆம் பக்கத் தொடர்ச்சி)**

சம்பந்தனுடைய பாதையும் தெரிவுகளும் பெரும்பாலும் ஜனநாயக அடிப்படையிலானது. கட்சிக்குள்ளும் அவர் தலைமை தாங்கிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள்ளும் அந்த ஜனநாயகத்தைச் சம்பந்தன் கடைப்பிடித்தாரா? என்று யாரும் கேட்கக் கூடும். அதில் சம்பந்தனுடைய குறைபாடும் பலவீனங்களும் தவறுகளும் உண்டு. ஒரு மூத்த தலைவர், வரலாற்றின் முக்கியமான காலகட்டத்தில் தலைமைப்பொறுப்பை வகிப்பதற்கான வாய்ப்பைப் பெற்றவர், அப்படிச் சிறுமையாக நடந்திருக்கக் கூடாது என்பது உண்மையே. அப்படி நடந்தால் அது அவர் மேற்கொள்ள விளைகின்ற அரசியலுக்கு எதிரானதாக - தடையாக அமையும். அப்படித்தான் அமைந்துமிருக்கிறது.

இன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சிதைந்து விட்டது. சம்பந்தன் தலைமை வகித்த தமிழரசுக் கட்சியும் உடைந்து சிதறும் நிலைக்குள்ளாகியுள்ளது. மட்டுமல்ல, தமிழரின் அரசியலே சிதைவுண்ட நிலைக்குள்ளாகியுள்ளது. எடுப்பார் கைப்பிள்ளை என்ற நிலைக்குத் தமிழ்ச் சமூகம் தள்ளப்பட்டுள்ளது. இதில் சம்பந்தனுடைய பலவீனங்களுக்கும் சுயநலன் சார்ந்த நடவடிக்கைகளுக்கும் பங்குண்டு.

ஆனாலும் இதையெல்லாம் கடந்து சம்பந்தன் அளவுக்கு புத்திபூர்வமாகவும் இராஜதந்திரமாகவும் தமிழரின் அரசியலை ஜனநாயகத் தளத்தில் முன்னெடுத்தவர்கள் சமகாலத்தில் இல்லை.

சம்பந்தனுடைய அரசியலுக்கு, அவருடைய முயற்சிகளுக்கு வரலாற்றில் எப்போதோ ஒருநாள் சிங்களத் தரப்பும் சர்வதேச சமூகமும் தலைகுனிந்து பொறுப்புச் சொல்லித்தான் ஆக வேண்டும். ஏனென்றால், அவர் ஜனநாயக வழியில் நின்றே நீதியைக் கோரினார். பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரில் நின்றுகொண்டே அவர்களுக்கான வாழ்க்கையைக் கேட்டார். வரலாற்றுப் பழிகளையும் பகைமையையும் மறந்து விடுவோம். புதிதாக பல்லின சமூக சமத்துவம் என்ற அடிப்படையில் தீர்வைக் காண்போம் எனப் பெருந்தன்மையோடு சொன்னார். இதை வெற்றிகொள்ள வைத்திருக்க வேண்டிய கடப்பாடு சர்வதேச சமூகத்துக்கும் இந்தியா மற்றும் இலங்கையின் சிங்களத் தலைமைகளுக்கும் உண்டு. ஆனால், இவை எவையும் அதைச் சரியாக உணர்ந்து செய்யவில்லை. பதிலாகச் சம்பந்தனுடைய குரல் மதிப்பிறக்கமே செய்யப்பட்டது. தோற்கடிக்கப்பட்ட சமூகமொன்றிலுள்ள ஒரு முதியவரின் முனகல், அரற்றல் என்ற அளவில்தான் அவருடைய கோரிக்கைகள் நோக்கப்பட்டன. ஆனால், அவை அவ்வாறு எளிதாக ஒதுக்கி விடக்கூடியவையல்ல. சம்பந்தனுடைய அரசியற் பலம் என்பதே அவருடைய மென்போக்கும் அதில் அவர் வைத்த நியாயமான கோரிக்கைகளும்தான்.

ஈழத்தமிழர்கள் மிக மோசமான வன்முறையையும் ஒடுக்குமுறையையும் 75 ஆண்டுகளாகச் சந்தித்தவர்கள். அதே அளவுக்கு தமது போராட்டத்தையும் வன்மையாக முன்னெடுத்தவர்கள். இவை இரண்டும் உண்டாக்கிய போர் முடிவுக்கு வந்தாலும் அதன் கொந்தளிப்பு இன்னும் அடங்கவில்லை. இந்தக் கொந்தளிப்பு தனியே தமிழர்களிடத்தில்தான் உண்டென்றில்லை. சிங்களவர்களிடத்திலும் உண்டு. ஏன் ஒரு எல்லைவரையில் முஸ்லிம்களிடத்திலும் உள்ளது. இந்தக் கொந்தளிப்பைத் தணிக்கக் கூடியவாறு போருக்குப் பின்னரான அரசியல் இலங்கைத் தீவில் முன்னெடுக்கப்படவில்லை. இதனைத் தனியே வலியுறுத்தி, முன்னெடுத்தவர் சம்பந்தன். சரியாகச் சொன்னால், அவர் ஒருவர் மட்டுமே அதைச் செய்தார் எனலாம்.

இதுவே அவரின் மீதான வரலாற்றின் மதிப்பாகிறது. மறுபக்கத்தில் இதுவே அவரின் மீதான மதிப்பிறக்கமாக - எதிர்ப்பாகவும் உள்ளது. ஒரே நேரத்தில் தமிழ்த்தரப்பினாலும் சிங்களத் தரப்பினாலும் எதிர்க்கப்படுகின்ற - விமர்சிக்கப்படுகின்ற - சந்தேகிக்கப்படுகின்ற பாத்திரம் சம்பந்தனுடையது. காரணம், சம்பந்தன் இனவாதத்துக்கு வெளியே நின்றமையே ஆகும். இனவாதத்துக்கு வெளியே அரசியலை மேற்கொள்ள விரும்புவோர் எவரும் சந்திக்கும் அவப்பெயரையே சம்பந்தனும் பெற்றார்.

ஆனாலும் நாட்டின் ஒட்டுமொத்தச் சமூகமும் வன்முறையின் வாய்ப்பட்டு அள்ளுண்டு சென்றுகொண்டிருந்த ஒரு காலச் சூழலில் உயிர் பிழைத்திருந்து ஜனநாயக ரீதியான அரசியலை முன்னெடுத்த தலைவர் இரா. சம்பந்தன் என்பது மறுக்க முடியாதது.

இனவாதக் கொந்தளிப்பினால் அழிந்து கொண்டிருக்கும் இலங்கைத் தீவை மீட்டெடுப்பதற்கு சமாதானமும் நீதியான முறையில் பல்லின சமத்துவமும் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திச் செயலாற்றிய மூத்த அரசியல் தலைவர் அவர்.

ஒடுக்கப்பட்ட இனமொன்றின் அரசியல் தலைமையை, அதனுடைய நீண்ட விடுதலை அரசியற் போராட்டத்தினை, போரின் பின் ஏற்றுச் செயற்படுவது எளிதானதல்ல. அதிலும் போரில் தோற்கடிக்கப்பட்ட தரப்பாகத் தமிழர்கள் இருந்த நிலையில், அதற்குத் தலைமைப்பொறுப்பை வகிக்கும் வரலாற்றுச் சூழல் சம்பந்தனுக்கு அமைந்தது. இது மிகச் சிக்கலான ஒரு நிலையாகும். அதைத் தன்னுடைய அறிவாற்றல், விரிந்த மனது, செழிப்பான அனுபவம் ஆகியவற்றின் மூலம் செயற்படுத்தியிருந்தால் இன்று அவர் மகத்தான - வெற்றியடைந்த தலைவராக இருந்திருப்பார்.

அறுபது ஆண்டுக்கும் மேலான சம்பந்தனுடைய அரசியற் பயணம் நெருக்கடிகள், சர்ச்சைகள், எதிர்ப்புகளின் மத்தியிலேயே நிகழ்ந்தது. அவருடைய அரசியல் நிலைப்பாட்டுக்காகச் சிங்கள இனவாதிகளினாலும் தீவிரத் தமிழ்த்தேசியவாதிகளாலும் மிக மோசமாக விமர்சிக்கப்பட்டிருக்கிறார். இதொரு விநோதமான - ஆனால் உண்மையான நிலையாகும். இதனுடைய அடுத்த கட்டம் எப்படி அமையப்போகிறது என்பதே சம்பந்தன் விட்டுச் செல்கின்ற கேள்வியாகும்.

# ஆப்கான் அகதிப்பெண்ணால் அல்லாடும் ஆளும் கட்சி

**முஸ்லிம் மக்களின் வாக்கு வங்கியை எதிர்பார்த்து இருக்கும் தொழிற்கட்சிக்கு அடுத்த தேர்தலில் பெரும் பின்னடைவு ஏற்படக்கூடும். அத்துடன் இந்த அரசியல் நெருக்கடியை ஆளும் கட்சி இலகுவாக தீர்க்குமா என்பதும் கேள்விக்குறியே.**

**● ஐங்கரன் விக்கினேஸ்வரா**

பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதற்காக அவுஸ்திரேலிய பசுமைக் கட்சியால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு ஆதரவளித்து வாக்களித்த செனட்டர் பாத்திமா பேமனின் நடவடிக்கையால் தொழிற்கட்சிக்கு அரசியல் நெருக்கடி ஏற்பட்டது.

### பசுமைக் கட்சிக்கு ஆதரவு:

பாலஸ்தீனத்துக்கான இரு நாடுகள் தீர்வுக்கான தேவை குறித்து சக தொழிலாளர் செனட்டர் பென்னி வோங்கால் மாற்றப்பட்ட திருத்தம் குறித்த அவரது பார்வை பற்றி விமர்சிக்கப்பட்டது.

அவுஸ்திரேலிய அரசாங்கம் , பாலஸ்தீனத்தை இரு நாடுகளின் தீர்வின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கும் பிரேரணையை சபையில் முன்வைத்தது.

பாலஸ்தீன தனிநாட்டு பிரேரணையின்போது செனட்டில் பலத்த சர்ச்சையைக் கிளப்பிய ‘பாத்திமா பேமன்’ , ஆஸி நாடாளுமன்றத்தின் ஹிஜாப் அணிந்த முதல் முஸ்லிம் பெண் செனட்டராக 2022 ஜூனில் உலக அகதிகள் தினத்தன்று பதவியேற்றவர்.

அகதிகளுக்காக குரல் கொடுத்த, முன்னாள் அகதியான பாத்திமா பேமன் கடந்த தேர்தலில் மேற்கு ஆஸ்திரேலிய செனட் இடத்தை வென்றமை அறிந்ததே.

### பாலஸ்தீன தனிநாட்டு பிரேரணை:

பிரதமர் அல்பானீஸ், தொழிலாளர் கட்சி, பாலஸ்தீன நீதிக்காக, அவர்களின் கடந்தகால அழுகைகளுக்கு செவி சாய்க்க வேண்டும் என்று பாத்திமா பேமன் வலியுறுத்தி வந்தார்.

மேலும் பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது அமைதி முன்னெடுப்பை விரக்தியடையச் செய்யாது, மாறாக அமைதி செயல்முறையை மீட்டு வைத்திருக்கும் எனவும் கூறினார்.

பாலஸ்தீன தனி அரசை அவுஸ்திரேலிய செனட் அங்கீகரிக்க வேண்டும் என்ற அவசரத் தேவையை அறிவிக்கும் ஒரு பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார்.

அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பென்னி வோங், பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பதும், இரண்டு நாடுகளின் தீர்வு மற்றும் நியாயமான மற்றும் நீடித்த அமைதிக்கு ஆதரவாக ஒரு அமைதி செயல்முறையின் ஒரு பகுதியாக நிகழலாம் என்று குறிப்பிட்டார். ஆயினும் அவரது



பிரேரணையின் மாற்றங்கள் செனட்டில் தோல்வியுற்றன.

### ஆளும் கட்சியிலிருந்து விலகல்:

இத்தகைய சர்ச்சைகளின் பின்னர் செனட்டர் பாத்திமா பேமன் ஆளும் தொழிலாளர் கட்சியிலிருந்து வெளியேறியதாக அறிவித்துள்ளார்.

செனட்டர் பாத்திமா பேமன் தனது அரசியல் எதிர்காலம் குறித்து ஒரு முக்கியமான அறிவிப்பை விரைவில் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் மேற்கு அவுஸ்திரேலியாவின் மக்களை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கான சிறந்த வழி பற்றி சிந்திப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

செனட்டர் பாத்திமா பேமன், பாலஸ்தீனத்துக்கான அவரது ஆதரவைப் பற்றிய தொடர்ச்சியான நடவடிக்கைகளுக்குப் பிறகு, பிரதமரால் தொழிலாளர் கட்சிக் கூட்டத்தில் இருந்து காலவரையின்றி இடைநீக்கம் செய்யப்பட்டார்.

### ஆப்கான் அகதிப் பெண் :

பாத்திமா பேமன் 2022 இல் செனட்டில் தனது முதல் உரையில் அவர் பிறந்து சிறிது காலத்திலேயே தலிபான் ஆட்சியில் இருந்த ஆப்கானிஸ்தானிலிருந்து அவரது குடும்பம் எப்படி வெளியேறியது என்பதை விவரித்து நாடாமன்ற உறுப்பினர்களை விழிநீர் சிந்த வைத்தார்.

“இன்று இரவு ஒரு இளம் பெண்ணாக, மேற்கு ஆஸ்திரேலியப் பெண்ணாக, ஒரு முஸ்லிம் நம்பிக்கையில், பெருமையுடன் நிற்கிறேன். அவளுடைய பாரம்பரியம் மற்றும் இந்த அழகான நாட்டுக்கு நன்றியுள்ளவள்” என்ற அவரின் பேச்சு பலரையும் கவர்ந்தது.

சமீப காலங்களில், காசாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளைக் கண்டிப்பதில் வெளிப்படையாகப் பேசி வருகிறார்.

“எனது மனசாட்சி மிக நீண்ட காலமாக சங்கடமாக இருந்தது. அது என்னவென்று நான் சொல்ல வேண்டும். இது ஒரு இனப்படுகொலை, வேறுவிதமாக பாசாங்கு செய்வதை மேற்குலக அரசுகள் நிறுத்த வேண்டும்” என்று மே மாதம் பாத்திமா பேமன் கூறியிருந்தார்.

மே மாதம் அவர் விடுத்த அறிக்கையில், “நதியிலிருந்து கடல் வரை, பாலஸ்தீனம் சுதந்திரமாக இருக்கும்” என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். பாலஸ்தீனியர்கள் தங்கள் தாயகத்தில் சுதந்திரமான மற்றும் சமமான குடிமக்களாக வாழ விரும்புவதாகவும், மற்றவர்களால் ஆதிக்கம் செலுத்தப்படாமல் இருக்க விரும்புவதாகவும் கூறினார்.

இதேவேளை ஜூன் 17 ஆம் திகதி அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில் பேமன், பாலஸ்தீன மக்களை அழிக்க இஸ்ரேலின் தற்போதைய முயற்சியினை சர்வதேசம் தடுத்த நிறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இதற்காகவே பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க தனது சொந்த அரசாங்கத்திற்கு அழைப்பு விடுப்பதாகவும் சுட்டிக்காட்டி இருந்தார்.

செனட்டர் பாத்திமா பேமனின் நடவடிக்கையால் தொழிற்கட்சிக்குள் தற்போது அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக முஸ்லிம் மக்களின் வாக்கு வங்கியை எதிர்பார்த்து இருக்கும் தொழிற்கட்சிக்கு , அடுத்த தேர்தலில் பின்னடைவை சந்திக்க நேரிடும். அத்துடன் இந்தஅரசியல் நெருக்கடியை ஆளும் கட்சி இலகுவாகத் தீர்க்குமா என்பதும் கேள்விக்குறியே.

32 YEARS OF SERVICE

மெல்பேர்னில் உங்கள் அபிமான வானொலி சேவை

சங்கநாதம்

3MDR 97.1FM

3MDR 97.1 fm mountain district radio

பிரதி ஞாயிறுதோறும் காலை 8 மணிமுதல் 10 மணிவரை கேட்டு மகிழலாம்

SANGANATHAM TAMIL COMMUNITY BROADCAST FM 97.1 ON SUNDAY 8AM TO 10AM

WEB www.sanganatham.net.au

sanganatham@gmail.com

vtca sanganatham



அ.முத்துக்கிருஷ்ணன்

# கூடடைந்த பறவை - ஜூலியன் அசாஞ்சே

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களை அழிக்கப்போகி றோம் என்றும், ஆப்கானிஸ்தானில் தாலிபான்களை அழித்தொழிப்போம் என்றும் அமெரிக்கா களம் இறங்கியது, அங்கே அவர்கள் போர் போர் என்று கர்ஜித்துக் கொண்டே ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களை கொன்று குவித்ததையும் இந்த உலகம் அறியும். அமெரிக்க ராணுவத்தில் பணியாற்றும் செல்சி மேனிங் தன் ராணுவம் செய்யும் காரியங்களை கண்டு ரௌத்திரம் கொள்கிறார், மெல்ல மெல்ல ஆவணங்களை, காணொளிகளை கைப்பற்றுகிறார். 2006 முதல் உண்மைகளை இந்த உலகிற்கு அறிவிக்கும் விக்கிலீக்ஸ் ஆசிரியர் ஜூலியன் அசாஞ்சேயை தொடர்பு கொண்டு அவர் வசம் லட்சக்கணக்கான அமெரிக்க ராணுவத்தின் கோப்புகளை ஒப்படைக்கிறார்.

ஜூலியன் அசாஞ்சே இந்தக் கோப்புகளை விக்கிலீக்ஸ் தளத்தில் வெளியிடுகிறார், அவை இந்த உலகம் முழுவதி லும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன. அமெரிக்கா தனது நேச நாடுகளை உளவுபார்ப்பது முதல் பலப்பல ஆவணங்கள், தகவல் பரிமாற்றங்கள் வெளிவந்தன. ஈராக்கின் பாக்தாத் நகரில் ரொய்டர்ஸ் நிறுவனத்தில் செய்தியாளர்கள் இருவர் உள்ளிட்ட 13 அப்பாவிப் பொதுமக்கள் ஒரு ஹெலிகொப்டரில் இருந்து சுட்டு சிதறடிக்கப்படும் காணொளி உலகின் மனசாட்சியை உலுக்கியது. 2006 முதல் அடுத்தடுத்து அரசுகள், அமைப்புகள், நிறுவனங்களின் ரகசியங்களை விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியது.

அமெரிக்க அரசு பெரும் வன்மத்துடன் ஜூலியன் அசாஞ்சேயை வேட்டையாடக் கிளம்பியது. தேசத்துரோகம், உளவு பார்த்தல் உள்ளிட்ட பல பிரிவுகளின் கீழ் வழக்கு தொடுத்து அசாஞ்சேயை கைது செய்யத் துடித்தது. இந்த விசயத்தில் அமெரிக்கா தனது நேச நாடுகளின் உதவியை நாடியது. ஸ்வீடன் நாட்டில் புனையப்பட்ட ஒரு வழக்கில் கைது வாரண்டுடன் அவர்கள் லண்டன் வந்த போது, அசாஞ்சே லண்டனில் உள்ள ஈக்குவேடார் தூதரகத்தில் தஞ்சம் அடைந்தார். ஈக்வேடாரில் ஆட்சி செய்து வந்த கம்யூனிஸ்ட் அரசு, உடனடியாக அவருக்கு அடைக்கலம் கொடுத்தது. தூதரகத்தின் ஒரு சிறிய அறையில் இருந்து கொண்டே விடாது இயங்கினார். கருத்துச் சுதந்திரத்திற்கு ஆதரவான செயல்பாட்டாளர்கள் உலகம் முழுவதிலும் அசாஞ் சேயை ஆதரித்தனர். லண்டனில் உள்ள ஈக்குவேடார் தூதரகத்திற்கு வெளியே தினசரி கூடுவார்கள், அசாஞ்சே அவரது அறையில் உள்ள பால்கனியில் நின்றபடி தனது ஆதவராளர்களுடன் உரையாடுவார்.ஆனால் இதே நேரம் அமெரிக்காவில் செல்சீ மானிங் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்கு பின்பு 35 ஆண்டுகள் அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

2019 இல் ஈக்வேடாரில் தேர்தல் நடைபெற்று அங்கே இடதுசாரி அரசு தோல்வியைத் தழுவியதும், அமெரிக்காவிற்கு இசைவான புதிய அதிபர் பதவியேற்றதுமே அவர் அசாஞ்சேவுக்கு கொடுக்கப்பட்ட அடைக்கலத்தை ரத்து செய்தார், அன்றே அசாஞ்சே பிரிட்டன் காவல்துறையால் கைது செய்யப்பட்டு பெல்மார்ஷ் சிறையில் அடைக்கப்பட்டார்.

அமெரிக்காவில் அசாஞ்சேயின் மீது 18 வழக்கு கள் பதிவு செய்யப்பட்டு அவர் அமெரிக்காவிற்கு நாடு கடத்திக் கொண்டு வரப்பட்டால் அவருக்கு 175 ஆண்டுகள் தண்டனையை நீதிமன்றங்கள் உறுதி செய்தன. அவரை எப்படி அமெரிக்காவுக்கு அழைத்து வருவது என்பது மட்டுமே அவர்களுக்கு பெரும் சவாலாக இருந்தது. பாகிஸ்தானில் நுழைந்து பின் லேடனை கொன்று தூக்கி வந்தது போல் லண்டனில் நுழைந்து ஒரு காரியத்தை செய்ய இயலாது என்பதை அவர்கள் அறிவார்கள்.

ஆனால் 2021ல் அசாஞ்சேயை தங்கள் வசம் ஒப்புவிக்க வேண்டும் என்கிற அமெரிக்காவின் கோரிக்கையை பிரிட்டன் நீதிபதி ஒருவர் நிராகரித் தார். அசாஞ்சேயின் உடல் நலம் அதற்கு ஒத்துழைக்க வில்லை என்றார் அவர். 2022ல் பிரிட்டன் அரசு அவரை அமெரிக்காவிடம் ஒப்படைக்க ஒப்புக்கொண்ட போதும், அவர் மீது பல்வேறு வழக்குகள் நடைபெற்ற நிலையில் அவரை அனுப்பவியலாத சூழல் ஏற்பட்டது.

அசாஞ்சேயை எப்படியேனும் காப்பாற்ற வேண் டும் என்கிற உறுதியான நிலைப்பாட்டுடன் இருவர் இயங்கி வந்தனர், ஒருவர் அமெரிக்க வழக்கறிஞர் எட்வர்ட் பொல்லக் மற்றொருவர் அசாஞ்சேயின் மற்றுமொரு வழக்கறிஞர் ஜெனிபர் ரோபின்சன். இருவரும் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து கடுமையான மன உறுதியுடன் பல்வேறு தளங்களில் காரியங்களை மேற்கொண்டார்கள்.

ஆஸ்திரேலியாவில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது, தொழிலாளர் கட்சியின் அந்தோணி அல்பனீஸ் பிரதம ராக பதவியேற்றார். அசாஞ்சேயின் நிலையை, அவர் செய்துள்ள மகத்தான காரியங்களைஅப்லனீஸ் அறி வார், அவரே களத்தில் இறங்கினார். அமெரிக்க அதி-பரை சந்தித்து இருமுறை உரையாடினார், ஆஸ்தி ரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவை அமெரிக்காவிற்கு அனுப்பிவைத்தார். ஆஸ்திரேலியா வின் அமெரிக்கத் தூதர் கெவின் ரூட் இதில் முக்கியமான பங்காற்றினார். காரியங்கள் மெல்ல மெல்ல நகர்ந்தன, இருப்பினும் அமெரிக்கா செல்வதில்லை என்பதில் அசாஞ்சே உறுதியுடன் இருந்தார்.

அமெரிக்க வழக்கில் இருந்த பலவீனங்களை ஆராய்ந்து அசாஞ்சேயின் வழக்கறிஞர் எட்வர்ட் பொல்லக் இந்த வழக்கில் அமெரிக்கா தோற்கும், தோல்விக்கு முன் அமெரிக்கா ஒரு ஒப்பந்தத்தை செய்து கொள்வதே நல்லது என்று அறிவுறுத்தினார்,

இங்கிலாந்தின் பெல்மார்ஷ் சிறையில் இருந்த அசாஞ்சே சார்பாக அமெரிக்காவின் நீதித்துறையுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. லண்டனில் இருந்து தனி விமானத்தில் அசாஞ்சேவுடன் அவரது இரு வழக்கறிஞர்கள், அமெரிக்கா மற்றும் பிரிட்டனுக்கான ஆஸ்திரேலியத் தூதர்களுடன் புறப்பட்டார். பசுபிக் கடலில் உள்ள வடக்கு மாரியானா தீவின் சாய்பானில் உள்ள நீதிமன்றத்தில் அசாஞ்சே ஆஜரானார், தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண் டார், அவருக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது, ஆனால் அவர் ஏற்கனவே அதை விட அதிகமான தண்டனையை கடந்து விட்டதால் அவர் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்.

சாய்பானில் இருந்து ஆஸ்திரேலியாவின் தலை நகரமான கான்பெரா நோக்கி விமானம் சென்றது, 15 ஆண்டுகளுக்கு பின் தன் கூட்டை அடைந்தார் ஜூலியன் அசாஞ்சே.

ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் அமெரிக்கா செய்த போர்க் குற்றங்களை உலக மக்களுக்கு அம்பலப் படுத்தியதன் வழியே ஒரு ஊடகவியலாளராக மக்களின் மனங்களை வென்ற ஜூலியன் அசாஞ்சே, இந்த முறை இன்னும் பெரிய நாயகனாக உரு மாறியே நாடு திரும்பினார்.

அசாஞ்சேயை தொடர்ந்து அமெரிக்க ஊடகவிய லாளரான எட்வர்ட் ஸ்நோடனும் இதே போல் ரகசிய ஆவணங்களை வெளியிட்டது தொடர்பாக அமெரிக்க அரசால் தேடப்பட்டு வருகிறார், உலகின் பல பகுதி களில் தஞ்சமடைந்த அவர் ரஷ்யாவிற்கு சென்று அங்கே அந்நாட்டின் பிரஜையாக அறிவிக்கப்பட்டிருக்கிறார்.

அமெரிக்காவின் ஊடகவியலாளர் இவான் கெர்ஷ்கோவிச் இதே போல் உளவு பார்த்தல் என்று குற்றம் சாட்டப்பட்டு ரஷ்யச் சிறையில் உள்ளார். வருகிற அமெரிக்க தேர்தல் பிரசாரங்களில் அவரது பெயர் தொடர்ந்து புழங்கி வருகிறது, நான் ஆட்சிக்கு வந்தால் அவரை விடுவிக்க அனைத்து முயற்சியையும் எடுப்பேன் என்று கூறி வருகிறார் முன்னாள் அதிபர் ட்ரம்ப்.

நிச்சயமாக ஜூலியன் அசாஞ்சே செய்த காரியம் என்பது ஒரு ஊடகவியலாளரின் கடமையே, அவர் எந்த விதமான ஆதாரங்களையும் தயாரிக்கவில்லை அமெரிக்காவின் ராணுவ ரகசியங்களை வெளியிட் டார், அதுவே படிப்படியாக அமெரிக்கா ஆப்கானிஸ் தானில் இருந்து வெளியேற வேண்டிய நிலை வரை இட்டுச் சென்றது. ஜீலியன் அசாஞ்சேயை போன்ற அபூர்வமான மனிதர்கள் வரலாற்றில் அவ்வப்போது தான் வருவார்கள், ஆனால் அப்படியான மனிதர் களின் பின்னால் உறுதியாக நிற்பது என்கிற உலக இடதுசாரிகளின் முடிவு முக்கியமானது, ஈக்குவேடார் தூதரகத்தில் இடதுசாரி அரசு அசாஞ்சேவிற்கு அடைக்கலம் அளிக்கவில்லை எனில் அவரது வாழ்வு எப்படி சென்றிருக்கும் என்பதை யூகிக்கவே முடியவில்லை, அதேபோல் ஆஸ்திரேலியாவில் தொழிலாளர் கட்சி ஆட்சிக்கு வரவில்லை எனில் இன்றைக்கு மேற்கொள்ளப்பட்ட பெரும் காரியங் கள் நிகழ வாய்ப்பேயில்லை என்பது நாம் இந்த வழக்கில் கற்கும் பாடம்.

# கறுப்புமாத வலி!

ஆர்.சுகந்தன்

ஈழத் தமிழரின் வரலாற்றில் ஜூலை மாதம், ஆறாத காயங்களையும் தீராத வலியையும் உண்டாக்கியது. 1983 ஜூலையில் இலங்கை அரசினால் மிகப் பெரிய வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. உயிரோடு மனிதர்கள் (தமிழர்கள்) கொழும்பு வீதிகளில் எரிக்கப்பட்டனர். வெலிக்கடைச் சிறையில் 53 தமிழர்கள் (அரசியற் கைதிகள்) கொல்லப்பட்டனர்.

ஜூலை 23 ஆம் திகதி ஆரம்பித்த இனவன்முறை மாதத்தின் இறுதி வரை நீண்டு சென்றது. இந்த வன்முறையில் 3,000 வரையானோர் உயிரிழந்திருக்கக் கூடும் எனக் கூறப்படுகின்றது.

10 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழரின் வாழ்விடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன என்றும் கோடிக்கணக்கான சொத்துக்கள் சூறையாடப்பட்டதாகவும் ஜூலை வன்முறை சம்பந்தமான தரவுகள் குறிப்பிடுகின்றன.

பல்லாயிரக்கணக்கானோர் அகதிகளாகி வடக்கு-கிழக்கு (தமிழர் பகுதி) நோக்கிப் பயணித்தனர். இப்படி அகதிகளாக ஏற்றிச் செல்லப்பட்ட மக்களின் கதையை மையப்படுத்தி எழுதப்பட்டதே அருளரின் “லங்கா ராணி” என்ற நாவலாகும். ஈழ இலக்கியத்தில் முக்கியமான அரசியல் நாவல் லங்காராணி.

இதை விட அந்த நாட்களில் பல கவிதைகளும் கதைகளும் ஆக்ரோஷத்துடன் எழுதப்பட்டன. அவற்றில் சிலவற்றை இங்கே தருகிறோம். அத்துடன், உலகை உலுக்கும் விதமாக நடந்த வன்முறைக் காட்சிகள் சிலவற்றையும். இதில் ஒரு காட்சி, பகிரங்கமாகவே நிர்வாணப்படுத்தப்பட்டு ஒரு தமிழர் படுகொலை செய்யப்பட்டதாகும். அந்த நாட்களில் பதிவு செய்யப்பட்ட இந்த ஒளிப்படங்கள் வன்முறைக்கும் வன்முறையில் ஈடுபட்டோருக்கும் வன்முறையில் பாதிக்கப்பட்டோருக்குமான சாட்சியமாகும். ஆனாலும் வன்முறையில் ஈடுபட்ட குற்றவாளிகள் - கொலையாளிகள் -தண்டிக்கப்படவே இல்லை.



இதுதான் இலங்கையின் நீதியும் ஆட்சியுமாகும்.

இந்த நிலை மாறாத வரையில் இலங்கை மயானங்களின் விளைநிலமாகவே இருக்கும்.

## 52★

சற்றே விலகி
நந்தி வழிவிட்டதுபோல்
வெலிக்கடையின் சிறைக்கூட
இருப்பு நெடுங்கதவு
தானே திறக்கும்
அங்கே
காவலர்கள் அறியாமல்
கற்சுவர்கள் சூழ்கின்ற
அறைகட்குள் கொலை நடக்கும்
பகுத்தறிவு ஆள்கின்ற
புதிய யுகம்
அற்புதங்கள்
ஒருக்காலோ நடந்தாலோ
ஒப்பார்கள் என்பதனால்
இருகால் நடந்தேறும்
கண்டு அலுத்த
கற்சுவரோ நானும்

- சி.சிவசேகரம்

(52★ என்பது, வெலிக்கடைச் சிறையில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கையைக் குறிக்கிறது. ஆனால், அந்த வன்முறையில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 53 ஆகும்)

## எல்லாவற்றையும் மறந்து விடலாம்...

எல்லாவற்றையும் மறந்து விடலாம்
இந்தப் பாழும் உயிரை
அநாதரவாக இழப்பதை வெறுத்து
ஒருகணப் பொறியில் தெறித்த
நம்பிக்கையோடு
காலி வீதியில்
திசைகளும், திசைகளோடு இதயமும்
குலுங்க விரைந்த போது,

கவிழ்க்கப்பட்டு எரிந்த காரில்
வெளியெ தெரிந்த தொடை எலும்பை,
ஆகாயத்திற்கும் பூமிக்குமிடையில்
எங்கோ ஒரு புள்ளியில் நிலைத்து
இறுகிப்போன ஒரு விழியை,
விழியே இல்லாமல், விழியின் குழிக்குள்
உறைந்திருந்த குருதியை,
‘டிக்மண்ட்ஸ்’ ரோட்டில்
தலைக் கறுப்புக்களுக்குப் பதில்
இரத்தச் சிவப்பில் பிளந்து கிடந்த
ஆறு மனிதர்களை,
தீயில் கருகத் தவறிய
ஒரு சேலைத் துண்டை,
துணையிழந்து,
மணிக்கூடும் இல்லாமல்
தனித்துப்போய்க் கிடந்த
ஒரு இடது கையை,
எரிந்து கொண்டிருக்கும் வீட்டிலிருந்து
தொட்டில் ஒன்றைச்
சுமக்க முடியாமல் சுமந்துபோன
ஒரு சிங்களக் கர்ப்பிணிப் பெண்ணை

எல்லாவற்றையும்,
எல்லாவற்றையுமே மறந்துவிடலாம்
ஆனால்-

உன் குழந்தைகளை ஒளித்துவைத்த
தேயிலைச் செடிகளின் மேல்
முகில்களும் இறங்கி மறைத்த
அந்தப் பின் மாலையில்
நீண்ட நாட்களுக்குப் பிறகு கிடைத்த
கொஞ்ச அரிசியை பானையிலிட்டுச்
சோறு பொங்கும் என்று
ஒளித்தபடி காத்திருந்தபோது
பிடுங்கி எறிபட்ட என் பெண்ணே,
உடைந்த பானையையும்
நிலத்தில் சிதறி
உலர்ந்த சோற்றையும்
நான் எப்படி மறக்க...?

- சேரன்

## உயிர்த்தெழுந்த நாட்கள்

இலங்கையில் கலவரம் என்பதன் அர்த்தம்
நிராயுதபாணித் தமிழ்க் குடும்பங்களை
சிங்களக் காடையும் படையும் தாக்குதல்.
சிலசில வேளை முஸ்லீம்களுக்கும்
இது நிகழ்ந்திடலாம்.
தமிழரின் உடைமை எரியும் தீயில்
தமிழரைப் பிளந்து விறகாய் வீசும்
அணுயுகக் காட்டு மிராண்டிகள் செய்யும்
கொடுமைகள் தன்னை எடுத்துச் சொல்லினர்.
பருந்தின் கொடுநிழல் தோய்ந்திடும் கணத்தில்
தாயின் அண்மையைத்
தேடிடும் கோழிக் குஞ்சாய்த் தவித்தேன்.
தமிழ் வழங்குமென் தாய்த் திருப்பூமியின்
‘தூர இருப்பே’ சுட்டதென் நெஞ்சில்
தப்பிச் செல்லும் தந்திரம் அறியா
மனம் பதைபதைத்தது.
தென் இலங்கை என் மன அரங்கில்
போர் தொடுத்த ஓர் அந்நிய நாடாய்
ஒரு கணப்பொழுதில் சிதைந்து போனது.

ஒருமைப்பாடு என்பது என்ன
அடிமைப்படுதலா?
இந்தநாடு எங்கள் சார்பாய்
இரண்டுபட்டது என்பதை உணர்ந்தேன்.
நாம் வாழவே பிறந்தோம்.
மரண தேவதை இயற்கையாய் வந்து
வருக என்னும் வரைக்குமிவ் வுலகில்
இஷ்டப்படிக்கு
பெண்டு பிள்ளைகள் தோழர்கள் என்று
தனித்தும் கூடியும் உலகவாழ்வில்
எங்களின் குரலைத் தொனித்து
மூக்கும் முழியுமாய் வாழவே பிறந்தோம்.

எமது இருப்பை
உயர்ந்தபட்சம் உறுதி செய்யும்
சமூக புவியியல் தொகுதியே தேசம்.
எங்கள் இருப்பை உறுதிசெய்திடும்
அடிப்படை அவாவே தேசப்பற்று.
நாடுகள் என்று இணைதலும் பிரிதலும்
சுதந்திரமாக
மானிட இருப்பை உறுதிசெய் திடவே.

★★★★★

வானொலிப் பெட்டியை வழமைபோல் திறந்தேன்
வழமை போலவே
ஒப்பாரிவைத்தது தமிழ் அலைவரிசை.
இனவெறிப் பாடலும் குதூகலஇசையும்
சிங்கள அலையில் தறிகெட எழுந்தது.
இதுவே இந்த நாட்டின் யதார்த்தம்
சிறைச் சாலையிலே கைதிகளான
எங்கள் நம்பிக்கை ஞாயிற்றின் விதைகள்
படுகொலைப்பட்ட செய்தி வந்தது
கிளாரினட் இசையின் முத்தாய்ப்போடு.
யாரோ எவரோ அவரோ இவரோ
அவஸ்தையில் இலட்சம் தலைகள் சுழன்ற
அந்தநாட்கள் எதிரிக்கும் வேண்டாம்
பாண்டியன் வாயிலில் கண்ணகியானது
சன்னதம் கொண்ட எனது ஆத்மா.
மறுநாட் காலை அரசு நடத்தும்
‘தினச்செய்தி’ என்னும்
காட்டு மிராண்டிகளின் குரலாம் தினசரி
‘பயங்கர வாதிகள் கொலை’ என எழுதி
எமது புண்ணில் ஈட்டி பாய்ச்சியது.
குற்றம் என்ன செய்தோம் சொல்க!
தமிழைப் பேசினோம்.
இரண்டாம் தடவையும் காட்டும்ராண்டிகள்
சிறையுட் புகுந்தனர் கொலைகள்விழுந்தன
கிளாரினட் இசையுடன் செய்தியும் வந்தது.

- வ.ஐ.ச. ஜெயபாலன்

1983 ஜூலையில் வெலிக்கடை சிறையில், 23, 28 இரண்டு நாட்களும் நடந்த படுகொலைச்சம்பவங்களின்போது கொல்லப்பட்டவர்களின் பெயர் விபரங்கள்: குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை, தேவன், நடேசன், சிவபாதம் மாஸ்டர், ஜெயரட்ணம், பாலசுப்பிரமணியம், அன்பழகன், சுரேஷ்குமார், அருந்தவராஜா, தேவக்குமார், சின்னையா, சிவானந்தராஜா, மயில்வாகனம், கந்தையா, உதயசீலன், ஈஸ்வரநாதன், நாகராசா, கணேசலிங்கம், சுதாகரன், இராமச்சந்திரன், மகேந்திரன், தில்லைநாதன், குலராஜசேகரம், உதயகுமார், சிவகுமார், சாந்தகுமார், சந்திரகுமார், ராஜன், அமிர்தலிங்கம், ராஜயோகநாதன், கிருஷ்ணகுமார், தவராஜசிங்கம், உதயகுமார் ஆகிய 35 பேர்.

மூன்று நாட்களின் பின்னர் 28 ஆம் திகதி கொல்லப்பட்டவர்கள்: மருத்துவர் ராஜசுந்தரம், பாஸ்கரன், தேவகுமார், துரைராஜா, சர்வேஸ்வரன், குமார், மரியநாயகம், நீதிராசா, நவரட்ணசிங்கம், ராசேந்திரன், குமாரசிங்கன், சேயோன், ஜெயமுகுந்தன், சிவசுப்பிரமணியம், சிறிக்குமார், இராஜரட்ணம், மனோரஞ்சன், கணேசலிங்கன் ஆகிய 18 பேர்.

# நாடற்றவர்களுக்காக உலகப்பந்தில் போராடப்போகும் காற்பந்து!




சர்வதேச காற்பந்தாட்ட அரங்கில் பெரும் அதிர்வை உண்டாக்கியிருக்கிறது தமிழீழ மகளிர் காற்பந்தாட்ட அணி. சர்வதேசப் போட்டியொன்றின் இறுதியாட்டத்துக்கு முன்னேறிய, நாடாற்ற மகளிரின் அணி, தமிழீழம் என்ற தேசத்தின் பெயரை எல்லோரையும் உச்சரிக்க வைத்திருக்கிறது. நாடற்றவர்களின் அணியாகக் களமிறங்கி, சாதித்துக் காட்டிய தமிழீழமகளிர்காற்பந்தாட்டஅணியின்உருவாக்கம்,ஒன்றிணைவு,பயிற்சிகள்,வியூகங்கள்,எதிர்கால இலக்குகள் தொடர்பில் அந்த அணியின் ஒருங்கிணைப்பாளர், பயிற்சியாளர், அணித் தலைவி ஆகியோருடன் எதிரொலி மேற்கொண்ட நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.

நேர்கண்டவர் - ஜெரா

## "தமிழீழம் எங்களின் அடையாளம்" அதுவே எமது அணி சொல்லும் செய்தி

### ஒருங்கிணைப்பாளரின் உள்ளக்கிடக்கை



**கேள்வி: தமிழீழ மகளிர் காற்பந்தட்ட அணியை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் (Idea) உங்களுக்கு எப்படி வந்தது?**

பதில்: ஆண்களுக்கான காற்பந்தாட்ட அணி இருப்பது போல மகளிருக்கான காற்பந்தாட்ட அணியொன்றை இறக்க வேண்டும் என்பது எங்களின் நீண்டநாள் ஆசை. கடந்த சிலவருடங்களாக, தமிழ் மகளிர் இளையோர் அவர்தம் நாடுகளில் உள்ள காற்பந்தாட்டக் கழகங்களில் சிறப்பாக விளையாடுகின்றனர் என்கிற தகலை அறிந்தவுடன், நாம் 2022 ஆம் ஆண்டு முதலாவது காற்பந்தாட்டத் தெரிவை நடத்தியிருந்தோம். ஆண்களும் பெண்களும் சமம் என்பது எமது விடுதலைப் போராட்டத்தில் நடைமுறையிலிருந்த விடயம்தான். அதனையே நாங்களும் எமது பிள்ளைகள் மத்தியில் கொண்டு செல்லத்தான் மகளிர் அணியை உருவாக்கினோம்.

**கேள்வி: நாடற்ற தேசிய இனங்களுக்கான விளையாட்டுகள் மூலம் (காற்பந்தாட்டம் போன்றவை) உலகிற்கு சொல்ல வருவதென்ன?**

பதில்: அங்கீகரிக்கப்படாத தேசங்களினது நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டுகளின் ஊடாக நாம் உலகத்திற்கு சொல்லும் செய்தி என்னவென்றால், நாமும் ஓர் இனம்தான். தமிழீழம் எங்களின் அடையாளம். எங்களிடம் அந்த அடையாளம் உண்டென உலகிற்கு காட்டுவதற்கான ஒரு வழியாக இந்தக் காற்பந்தாட்டப் போட்டியை வடிவமைத்திருக்கின்றோம். வாய்ப்புகள் கிடைக்கும்போதெல்லாம் எமது இனத்தையும் இனத்தின் அடையாளத்தையும் உலகிற்கு காட்டவே இந்தப் போட்டியில் கலந்துகொள்கின்றோம். எனவே ஈழத்தமிழர்களுக்கான தேச அங்கீகாரத்திற்காகவே நாம் தமிழீழத்தை பிரகடனப் படுத்தி விளையாடுகின்றோம்.

**கேள்வி: ஈழத்தமிழர்கள் உலகம் முழுவதும் பரவி வாழ்கின்ற போதிலும் தங்களுக்கிடையில் ஒரு இணைப்பில் இல்லாதவர்களாக இருக்கின்றனர். இதுபோன்ற விளையாட்டுக்கள் ஈழத்தமிழ் மக்களை எவ்வகையில் இணைக்க உதவும்?**

பதில்: தமிழர்கள் உலகம் முழுவதும் வாழுகின்றபோதிலும், தமிழ் மொழியால் தான் நாம் இணைகின்றோம். அத்தோடு ஈழத்தமிழர்கள் எனச் சொல்லும்போதே நாம் இனமாக இணைகின்றோம். உதாரணமாக எமது அணியை எடுத்துக்கொண்டால், அதில் இடம்பெறுகின்ற அனைவருமே வெவ்வேறு நாடுகளிலிருந்து வந்து இணைந்துகொண்டவர்கள்தான். எங்கள் அணியின் சுவாரஸ்யமே அதுதான். நாம் ஒரு பருவகால விளையாட்டணி கிடையாது. முதன்முதலாக ஒரு வாரப் பயிற்சியுடன், முன்பின் சந்தித்திராத 22 விளையாட்டு வீராங்கனைகளும், 9 பணியாளர்களும் ஒரே இடத்தில் கூட்டாக விளையாடியமையும், அது எங்களின் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றமையும் போதும் எங்களின் இனத்தை ஒன்றிணைப்பதற்கு. அந்த அடையாளத்திற்கு உதாரணம் தான் இந்த அணி. ஏழு நாடுகளிலிருந்து வந்த வீராங்கனைகளும், அவரவர் நாடுகளில் பேசுகின்ற மொழி வித்தியாசமானது. வயது வித்தியாசமானது. அவர்களுக்கிடையில் அதிக வேற்றுமைகள் இருந்தன. ஆனால் நாம் தமிழர்கள், நாம் ஈழத்தமிழர்களுக்காக விளையாடுகின்றோம் போன்ற விடயங்கள்தான் எங்களைப் பெரியளவில் இணைத்தன.

**கேள்வி: இப்படியொரு சர்வதேசப் போட்டியினை நடத்துவதில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் எவை?**

பதில்: அதிக சவால்கள் இருந்தன. முக்கியமாக நிதிசார் பிரச்சினைகள் இருந்தன. ஒரு வாரப் போட்டிக்கு, மகளிர் அணிக்கு மாத்திரமே நாற்பதாயிரம் யூரோக்கள் தேவைப்பட்டன. ஏனென்றால், இந்தப் பிள்ளைகளின் செலவு முழுவதையுமே எங்களின் அமைப்பே பொறுப்பேற்கும். எனவே நிதிப் பக்கத்தினால் பெரிய தொகை. அதனை சேகரித்துக் கொடுப்பது பெரியசவால்.

இன்னொரு சவால் என நான் குறிப்பிடுவது, ஏழு வெவ்வேறு நாடுகளிலிருந்து அழைக்கப்பட்ட விளையாட்டு வீராங்கனைகளை ஓரிடத்தில் ஒருங்கிணைத்து ஒரு வாரப் பயிற்சி வழங்கவேண்டும். இவர்களுக்குப் பயிற்சி வழங்குவது என்பதை விட, ஒரு வழித்தடத்தின் கீழ் கொண்டுவருவதைத்தான் ஒரு வாரத்திற்குள் நாம் முக்கியத்துவப்படுத்தினோம். அதுவேதான் பெரிய சவாலாகவும் இருந்தது. ஏனென்றால் இந்தப் பிள்ளைகள் அனைவரும் தத்தம் நாடுகளில் உள்ள நல்ல கழகங்களில் உயர்தரமான பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே சவால் என்பது இவையிரண்டும்தான். இந்த இரண்டு பிரதான சவால்களையும் தாண்டி நிச்சயமாக சாதிப்போம் என்ற நோக்கத்தில் நாம் இயங்கினோம்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## "தமிழீழ அணியின் பயிற்றுவிப்பாளரை விட வேறென்ன பேறு வேண்டும்?"

### சவால்களை சாதனைகளாக்கிய பயிற்றுவிப்பாளரின் எண்ணங்கள்

**கேள்வி: வெவ்வேறு நாடுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட வீராங்கனைகளுக்கான பயிற்சியினை எப்படி வழங்கினீர்கள்?**

பதில்: தமிழீழ காற்பந்தாட்ட மகளிர் அணிக்கான வீராங்கனைத் தெரிவுகள் சமூக வலைப்பின்னல்களுக்கூடாகத்தான் அறிவிக்கப்பட்டன. அதில் 89 அணிகள் பதிவு செய்திருந்தன. அதில் இருபத்தியிரண்டு பேரையும் நாங்கள் எப்படி தெரிவுசெய்தோம் என்றால், வீராங்கனை, தான் வாழும் நாட்டில் உள்ள விளையாட்டுக் கழகத்தில் பதிவுசெய்திருத்தல் வேண்டும். இந்த காற்பந்தாட்டத் தொடரில் முழுமையாக விளையாட வேண்டும். மற்றையது குறித்த வீராங்கனையின் விளையாட்டுக்கழகத்தின் தகுதிகளையும் பரிசீலித்தோம். எவ்வளவு காலமாக குறித்த வீராங்கனை விளையாடி வருகிறார் என்பதையும், அவரிடமுள்ள காற்பந்தாட்ட அறிவினையும் அவதானித்தோம். இந்தக் காற்பந்தாட்டத் தொடருக்கான பயிற்றுவிப்பாளர் தெரிவிலும் சர்வதேச நடைமுறைகளைப் பின்பற்றினோம். குறிப்பாக FIFAவின் அங்கீகாரம் பெற்ற விளையாட்டுக் கழகமொன்றில் அந்த பயிற்றுவிப்பாளர் 90 வீதமான தரத்தினைப் பெற்றிருக்கவேண்டும். அமெரிக்கா, கனடா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் உள்ள கழகங்களுக்கான பயிற்றுவிப்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கான பொதுநடைமுறை இதுதான்.

எங்களின் தமிழீழ அணியிலும் அதே மாதிரியான நடைமுறைகளே பின்பற்றப்படுகின்றன. ஆண்களுக்கோ அல்லது பெண்களுக்கோ பயிற்றுவிப்பாளராக வருபவர்கள் சரியான சர்வதேச பயிற்சித் தரப்படுத்தல்களைக் கொண்டிருக்க வேண்டும். முதலில் நாம் இவ்வளவு விடயங்களையும்நிறைவுசெய்துகொண்டபின்னரே ஒரு விளையாட்டு வீரரை அணுகலாம். காற்பந்தாட்டத்தைப் பற்றிக் கதைக்கலாம். காற்பந்தாட்டத்திற்கு மொழியில்லை. அதிசிறப்பான பயிற்றுவிப்பாளர்களின் ஊடாக வீராங்கனைகளைத் தொடர்புகொண்ட போதும், தெரிவுசெய்தபோதும் அது இலகுவானதாக இருந்தது. எங்களுக்கு பயிற்சிக்கான காலமாக ஒன்றரை வாரங்களே கிடைத்தன. ஏழு நாடுகளிலிருந்து வீராங்கனைகளைத் தெரிவுசெய்தபடியால், அனைவரையும் இணைத்துப் பயிற்சியில் ஈடுபட சில நாட்களே வாய்ப்பிருந்தது. பயிற்சி சிறப்பாக இடம்பெற்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)



## "என் தாய்நாட்டுக்கான போராட்ட வடிவமாக காற்பந்தும் மாறும்"

### அணித்தலைவியின் நம்பிக்கை

**கேள்வி: தமிழீழம் பற்றிய உங்களின் புரிதல் என்ன?**


பதில்: நான் தமிழ் இனத்தைச்சார்ந்தவள். எனது அம்மா, அப்பாவும் தமிழர்கள். நான் நோர்வேயில் பிறந்திருப்பினும், தமிழீழம் பற்றி அதிகம் கற்றிருக்கிறேன். நான் சிறுவயதிலிருக்கும்போதே எனது பெற்றார், தமிழீழத்தின் நிலைவரம் குறித்து பல கதைகளைச் சொல்வார்கள். தமிழீழத்தின் நிலைவரங்களை விளங்கப்படுத்துவார்கள். தற்போதைய சூழ்நிலைகள், அவர்களின் சிறுவயது நினைவுகள் எனப் பலவற்றைப் பகிர்ந்துகொள்வார்கள். அந்தக் கதைகளை கேட்கும்போது, சிலநேரம் எனக்கு கவலையாகவும், உணர்வாகவும் இருக்கும். எத்தனையோ ஆயிரம் மக்கள் எங்களுக்காக உயிர்நீத்திருக்கிறார்கள். எத்தனையோ மாவீரர்கள் எங்களுக்காக உயிரைத் தியாகம் செய்திருக்கின்றனர். அந்தக் கதைகளைக் கேட்கும்போதெல்லாம், எங்களின் தாய்நாட்டுக்கு அங்கீகாரம் கிடைக்கவேண்டும். அதற்குப் பெருமை சேர்க்கவேண்டும் என்கிற எண்ணம் எனக்குள் பிறக்கும். சிறுவயதிலிருந்து நான் கேள்விப்பட்ட கதைகளின் ஊடாகவே தமிழீழம் எனக்கு வரைபடமாக இருக்கிறது. என்னுடைய அப்பா அம்மா இந்தக் கதைகளைச் சொல்லாவிட்டால் தமிழீழம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது போயிருக்கும். எங்களின் கதைகளை கேட்டபடியால்தான், இவ்வளவு பற்றுடன் என்னால் இயங்க முடிகிறது. அதனையே நான் தமிழீழத்திற்காக விளையாடும்போது மிகப்பெரிய பெருமையே ஏற்பட்டது. அந்தப் பெருமையை விடவும், எத்தனையோ மக்களினதும், மாவீரர்களினதும் கனவை நிறைவேற்ற முயற்சிப்பதில் பெரியதொரு மகிழ்ச்சியடைகிறேன். அடுத்தடுத்தடுத்த தலைமுறைக்காகவும், எங்களின் தாய்நாட்டிற்காகவும் நான் போராடுவேன்.

**கேள்வி: நாடற்ற தேசிய இனங்களுக்கான காற்பந்தாட்ட அணியின் தலைவி என்கிறவகையில், வளர்ந்து வரும் அடுத்தடுத்தடுத்த தலைமுறைகளுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள். ?**

பதில்: பெற்றார்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், தயவுசெய்து உங்களின் பிள்ளைகளைக் காற்பந்தாட்டம் விளையாட விடுங்கள். அவர்களின் விருப்பங்களுக்கு அனுமதியுங்கள். அப்போதுதான் அவர்களின் தாய்நாட்டிற்குப் பெருமை சேர்க்க முடியும். எனது பெற்றார் என்னை காற்பந்தாட்டப் போட்டியில் விளையாட அனுமதித்தமையினாலேயே என் தேசத்திற்குப் பெருமைசேர்க்க முடிந்தது. எனது அணியில் விளையாடி அத்தனை பேரின் பெற்றாரும் அனுமதித்தமையினாலேயே இது சாத்தியப்பட்டிருக்கிறது. எத்தனையோ பிள்ளைகளுக்கு நாங்கள் முன்னுதாரணமாக இருக்கின்றோம். எனவே உங்களின் பிள்ளைகளையும் அனுமதியுங்கள். அவர்களும் நாட்டுக்குப் பெருமை சேர்ப்பார்கள்.

**கேள்வி: இந்தத் தொடரில் உங்களின் அணியினர் எதிர்கொண்ட சவால்கள் என்ன?**

பதில்: தமிழீழத்திற்காக ஒரு மகளிர் அணியாக விளையாடுவது இது முதற் தடவை. இவ்வளவு நாடுகளிலிருந்தும் வீராங்கனைகள் தெரிவாகி, ஓரிடத்தில் விளையாடுவது அவ்வளவு சுலபமான விடயமல்ல. மிகவும் கடினமானதாக இருந்தது. அதிலும் தொடக்கத்தில் மிகவும் கடினமாக இருந்தது. ஆரம்பத்தில் யாரையும் ஒருவருக்கொருவர் தெரியாது. அறிமுகமில்லை. வேறுவேறு நாட்டிலிருந்து வருகைதந்தவர்கள். எனவே அவர்களுடன் பழகி உறவுகளை ஏற்படுத்தவும் வேண்டும், காற்பந்தை விளையாடுவதிலும் கவனம் செலுத்தவேண்டும். இதுவொரு சவாலாக இருந்தது. அதுவே பெரியதொரு சாதனைதான். எனக்கு இன்னொரு சவால் இருந்தது. ஒஸ்லோவில் எனக்குப் பரீட்சை இருந்தது. அதனையும் சமாளித்துக்கொண்டு, காற்பந்தாட்டத்திலும் கவனத்தை செலுத்த வேண்டியிருந்தது. ஒரு வாரத்தில் சந்தித்து, பயிற்சி பெற்றி, ஒரு சர்வதேசப் போட்டியில் கலந்துகொண்டு, இறுதி வரை முன்னேறி இரண்டாமிடமாக வந்தமை மகிழ்ச்சியும், பெருமையுமாகும்.



**கேள்வி: காற்பந்தாட்டத்தில் ஆர்வம் எப்படி வந்தது?**

பதில்: எனக்கு நான்கு வயதிலேயே காற்பந்தாட்டம்மீது ஆர்வம்வந்துவிட்டது. அதற்கு முதலே எனது அண்ணன்களை அப்பா காற்பந்து விளையாட காரில் அழைத்துச்செல்வார். அப்போது நான் சிறியவள். எனக்குக் காரில் பயணிக்க அதிக விருப்பம். எனவே அவர்களுடன் பயணிக்க நான் அடம்பிடிப்பேன். எனவே அவர்கள் விளையாடப் புறப்படும்போதெல்லாம், அப்பாவின் சப்பாத்தை அணிந்து கொண்டு நானும் தயாராக நிற்பேன். அந்த நாட்களிலிருந்தே நான் காற்பந்து விளையாட ஆரம்பித்துவிட்டேன். எனது பெற்றாரும் அதற்கு அனுமதியளித்து விட்டனர். அன்றிலிருந்து இன்றுவரை காற்பந்துவிளையாடிக்கொண்டிருக்கின்றேன். அந்தக் கார்ப் பயணத்தின்மீதான ஆசைதான் என்னைக் காற்பந்தாட்டம் மீது ஈர்ப்புக்கொள்ளச் செய்திருக்கின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# “தமிழீழம் எங்களின் அடையாளம்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கேள்வி: உலகம் முழுவதும் கிரிக்கெற் கவர்ச்சிகரமானதும், அதிக மக்களின் கவனத்தை ஈர்க்கும் ஒரு விளையாட்டாகவும் இருந்து வருகின்றது. இந்நிலையில் நீங்கள் காற்பந்தாட்டத்தை முதலில் தெரிவுசெய்தமைக்கான காரணம் என்ன?**

பதில்: கிரிக்கெற் மட்டுமல்ல, அதிக விளையாட்டுக்கள் உலகளவில் பிரபலமானவையாக இருக்கின்றன. ஆனால் நாங்கள் ஏன் காற்பந்தாட்டத்தினைத் தெரிவுசெய்தோம் என்றால், கடைசி பத்தாண்டுகளாக, நாம் வாழுகின்ற நாடுகளில் இங்குள்ள அணிகளோடு இணைந்து விளையாடுவது இலகுவானது. இன்னொரு விடயம், காற்பந்தாட்ட அணி, 2003 ஆம் ஆண்டு ஈழத்தில் இருந்தது. அது ஆண்களுக்கான அணி. அந்த அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அதனை வெளியில்கொண்டுவந்து, வெளிநாடுகளில் விளையாடுவதற்கு நாம் உருவாக்கியதுதான் Tamileelam Football Association. காற்பந்தாட்டமானது தாயகத்திலிருந்தமையால்தான் அந்த அணியைத் திரும்பவும் கொண்டுவந்தோம். பெண்கள் மாத்திரமல்ல, ஆண்கள்கூட தத்தம் நாடுகளில் விளையாடிவருகின்றனர். அந்தந்த நாடுகளில் உள்ள பெரிய கழகங்களில் பயிற்சிகளைப் பெறுகின்றனர். அந்தந்த நாடுகளில் தமிழ்க் கழகங்களுக்கிடையிலான போட்டிகள்கூட இடம்பெறுகின்றன. நகரக் கழகங்களுக்கிடையிலான போட்டிகள்கூட உண்டு. எனவே 11 பேர் கொண்ட அணியை உருவாக்கவும், எங்களின் இன அடையாளத்தை வெளிப்படுத்தவும், அதனை உலகெங்கும் எடுத்துச்செல்லவும் காற்பந்தாட்டத்தை தெரிவுசெய்தோம்.

**கேள்வி: இந்தப் போட்டித்தொடரின் அடுத்தடுத்த கட்டங்களை எவ்வாறாகத் திட்டமிடுகிறீர்கள்?**

பதில்: இதுவேதான் எங்களின் மகளிர் அணி கலந்துகொண்ட முதலாவது சர்வதேசப் போட்டி. ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு போட்டியை நாம் ஏற்படுத்திக்கொண்டே இருக்கவேண்டும். அது அணிக்கும், விளையாட்டுக்கும் அவசியப்படுகின்றது. இனிவரும் மாதங்களில் அதிக சர்வதேச போட்டிகள் வரப்போகின்றன. அதற்கான அழைப்பிதழ்கள்கூட எமக்குக் கிடைத்திருக்கின்ற.ன நாம் விளையாடிய கொனிவா என்ற அமைப்புக்குள்ளும் அடுத்தடுத்துப் பல போட்டித்தொடர்கள் வரவுள்ளன. வெவ்வேறு அணிகளுடனான சர்வதேச போட்டிகளில்தான் எமது இரண்டு அணிகளையும் இறக்கி விளையாடுவது என்கிற திட்டத்தில் இருக்கின்றோம். எனவே எங்களின் இந்த இரு அணிகளையும் மேலும் வலுப்படுத்தி இந்தப் போட்டிகளில் ஈடுபடுவது ஒரு பக்கம் இருக்கிறது. அதேபோல அடுத்தடுத்த தமிழ்த் தலைமுறைகளை அவர்கள் வசிக்கின்ற நாடுகளில் உள்ள விளையாட்டுக்களில் ஈடுபடுத்துவது, அது காற்பந்தாட்டம் தவிர்ந்த விளையாட்டாகினும்கூட அவர்களை விளையாட்டுத்துறையில் வளர்ப்பதும் எமது அமைப்பின் விருப்பம்தான். எனவே ஒரு பக்கம் சுற்றுப்போட்டிகளில் கலந்துகொள்வது ஒரு நோக்கமாக இருந்தாலும் எங்களின் பிள்ளைகளை அடித்தளத்திலிருந்தே விளையாட்டுத்துறையில் வளர்ப்பதும் எங்களின் நோக்கமாக இருக்கின்றது. இதனையே அடுத்தடுத்த வருடங்களில் நடைமுறைப்படுத்துவோம்.

**கேள்வி: உங்களின் இந்தச் செயற்பாட்டிற்கு எவ்விதமான ஆதரவுகள் உலகத்தமிழினத்திடமிருந்து கிடைத்தது?**

பதில்: எங்களின் மகளிர் அணியினர் இறுதிப்போட்டியில் கலந்துகொண்டமையையிட்டு மக்கள் மத்தியிலிருந்து எமக்குக் கிடைத்த ஆதரவை நாம் எதிர்பார்க்கவில்லை. ஒரு பெரிய மேடையில் வைத்துத் தமிழ் மக்கள் எம்மைப் பார்த்தமை எமக்குப் பெருமைசேர்த்த விடயம்தான். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆண்களுக்கு சமமாக பெண்களும் களத்திலிறங்கிய சமுதாயத்தினர்தான் நாங்கள். அந்தப்பக்கத்திலிருந்து பார்க்கும்போதுகூட தமிழ் மக்கள் புல்லரிப்பைத்தரக்கூடிய வகையில் ஆதரவைத் தந்தனர். எத்தனையோ பெற்றோர், தமிழீழ அணிக்காக விளையாடுவதைப் பெருமையாகச் கூறினர். அதுவே எங்களுக்கு உற்சாகத்தையும், உத்வேகத்தையும் அளித்தது. எங்களின் இனம், எங்களின் நாடு என ஊடகங்கள் அளித்த வரவேற்பு மிகுந்த நம்பிக்கையைத் தந்தது. குறிப்பாக 22 வீராங்கனைகளினதும் பெற்றோர், வெவ்வேறு நாடுகளிலிருந்தும் எங்களின் அணியையும், பணியாளர்களையும் நம்பி அனுப்பிவைத்தமையும் மிகப்பெரிய நன்றிக்குரியது.

# “தமிழீழ அணியின் பயிற்றுவிப்பாளரை விட...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக விளையாடிய நாடுகள் மாதக்கணக்கில் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தன. அனைவருமே அருகருகாக வசிப்பவர்கள். அவர்களுக்குப் பயிற்சியளிப்பது இலகுவானதாக இருந்திருக்கும். ஆனால் நாம் ஒன்றரை வாரங்களுக்குள்ளேயே அனைத்தையும் கற்பிக்கவேண்டியிருந்தது. கற்க வேண்டியிருந்தது. விரைவாகக் கற்றுத்தேர்ந்து விளையாட்டில் வெற்றியீட்ட வேண்டும் என்ற குறிக்கோளில் இருந்தோம்.

**கேள்வி: இதுவொரு விளையாட்டு என்பதையும் தாண்டி, தமிழீழத் தேசமொன்றின் அங்கீகாரத்துக்கானது என்கிற விடயத்தை உங்களின் வீரர்களுக்கு கற்பித்துள்ளீர்களா?**

பதில்: வீராங்கனைகள் தமிழீழ அணி என்பதை உணர்ந்துதான் அணியில் இணைந்தார்கள். சமூக அமைப்புக்கள் ஊடாக வீராங்கனைகளைத் தெரிவுசெய்வதற்கான பதிவுகளின்போதெல்லாம் அவர்களின் இலக்கு தெளிவாகத் தெரிந்திருந்தது. அனைத்தையும் விளங்கிக்கொண்டே அணியில் இணைந்தனர். அவர்களின் பெற்றார் மிகவும் பொறுப்பாகவும், சிறப்பாகவும் தமது கடமைகளைச் செய்துள்ளனர். அதாவது, எங்களின் மொழி, எங்களின் கதைகள் என எங்கள் இனத்தின் முழுவிடயங்களையும் உள்வாங்கிக்கொண்டுதான் அணிக்குள் வந்தனர். எனவே எங்களுக்குப் பயிற்சியை வழங்குவதும், வீராங்கனைகளைக் கையாள்வதும் இலகுவாக இருந்தது. அதேவேளை பயிற்றுவிப்பாளர்களாகிய நாங்களும் ஒவ்வொரு நாளும் எங்களின் வரலாற்றிலிருந்து ஒரு விடயத்தைப் பற்றி வீராங்கனைகளுடன் கலந்துரையாடுவோம். பகிர்ந்துகொள்வோம். வீராங்கனைகளும் அதில் ஆர்வத்தோடு கலந்துகொண்டனர்.

**கேள்வி: அதற்கு வீராங்கனைகளின் பிரதிபலிப்பு என்னவாக இருந்தது?**

பதில்: ஒவ்வொரு வீராங்கனையும் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். தம் நாட்டுக்காக விளையாடுவதன் உச்ச சந்தோசத்தை வெளிப்படுத்தினர். இதனை மிகப் பெரியதொரு வாய்ப்பாகக் கருதினர். தம் வாழ்வின் கனவாக, பெருமையாகத்தான் பார்த்தனர். அதை அவர்கள் அப்படி உணர்ந்தமை எங்களுக்கு மிகுந்த சந்தோசத்தையும், உத்வேகத்தையும் அளித்தது. நம்பிக்கையை அளித்தது.

**கேள்வி: தேசமொன்றைப் பிரகடனம் செய்யும் வேலையையும் இந்த காற்பந்தாட்டம் செய்துவருகின்றது. இதற்குப் பெண்களை தெரிவுசெய்தமைக்கான காரணம் என்ன?**

பதில்: முதலாவது காரணம், இன்றைய காலத்தில் மகளிருக்கான காற்பந்தாட்டம் உலகளவில் வளர்ந்து வருகின்றது. காற்பந்தாட்டம் ஒரு தொழிலாகப் பரிணமித்துவிட்டது. புலம்பெயர் தேசங்களில் தமிழர் தலைமுறைகள் மருத்துவர்கள், சட்டத்தரணிகள், விஞ்ஞானிகள் என அதிக சாதனைகளைச் செய்கின்றனர். நிச்சயமாக எனக்கு இதுவொரு சவால். எங்களின் நட்சத்திரங்களை நாம் வெளியில் கொண்டு வரவேண்டும். உலகத்திற்குக் காட்டவேண்டும். அவர்கள் உச்சத்தை நோக்கிப் பயணிக்கையில் அதிக கதவுகளைத் திறக்க நாங்கள் ஆயத்தப்படுத்திக் கொடுக்க வேண்டும். இரண்டாவது காரணம், நான் காற்பந்தாட்டத்தை அதிகம் நேசிக்கும் ஒருவன். எனக்கு காற்பந்தாட்டம் பிரமாண்டமானதொரு விடயம். தமிழீழ தேசிய அணிக்கு தலைமைப் பயிற்சியாளராக வருவது வாழ்வின் மிகப்பெரும் உச்சம். அதுவொரு கனவு. இலட்சியம். அதிசிறந்த வாய்ப்பும், பொறுப்புமாகும். ஆண்கள் அணியோ, பெண்கள் அணியோ இப்படியொரு வாய்ப்பு வரும்போது யார் வேண்டாம் என்று சொல்வார்கள்? இது எனது கடமை எனக் கருதி, என் முழுமனதுடன் இதனைச் செய்தேன்.

**கேள்வி: இந்த சீசனில் உங்கள் அணியில் ஏற்பட்ட பாய்ச்சல்கள், சறுக்கல்கள் என்று எதனை மதிப்பிட்டீர்கள்?**

பதில்: எங்களின் வீராங்கனைகளுக்கு அதிக காயங்கள் ஏற்பட்டன. உடலியல் ரீதியாக அதிகம் பாதிக்கப்பட்டனர். போட்டிகளில் தொடர்ச்சியாகவிளையாடவேண்டியிருந்தது. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு போட்டி நடந்தது. ஒரே நாளில் இரண்டு போட்டிகளில்கூட வீராங்கனைகள் விளையாட வேண்டிவந்தது. நாங்கள் இறுதிச் சுற்றுக்கு முன்னேறும் வரையில் Key Players உடன்தான் விளையாட வேண்டும் என்கிற முடிவில் இருந்தோம். எனவே அவர்கள் தொடர்ச்சியாக விளையாடவேண்டியிருந்தது. இதனால் காயங்கள் ஏற்பட்டன. இன்னொரு சறுக்கல், இறுதிப் போட்டியில் 70 ஆவது நிமிடம் வரையில் ஒன்றுக்கு பூச்சியம் என்கிற கணக்கில் இருந்தோம். அடுத்து இரண்டு கோல்கள் போடப்பட்டன. இதனால் இறுதிப்போட்டியில் தோல்வியுற்றோம். நாம் முதல் போட்டிகளில் அதிக சக்தியை இழந்திருந்தமையும் தோல்விக்கு ஒரு காரணம் எனக் கருதுகின்றேன்.

ஏழு நாடுகளிலிருந்து வீராங்கனைகள் கலந்துகொண்டனர். 22 பேரையும் நாம் ஒன்றிணைத்து ஒரு விளையாட்டுத் திட்டத்தினுள் கொண்டு வந்து, பந்தை வைத்திருக்கும்போது எப்படி நடந்துகொள்ளவேண்டும், பந்து இல்லாத வேளைகளில் என்ன செய்யவேண்டும் என்கிற விளையாட்டுப் பொறிகளை உருவாக்கி, விளையாடியதில் எங்களின் பயிற்றுவிப்பாளர்கள் அனைவருக்குமே மிகுந்த மகிழ்ச்சி. சொற்ப காலத்தில் இவ்வளவு விடயங்களையும் செய்திருந்தோம். அடுத்தடுத்து வரப்போகின்ற உலக கிண்ணப் போட்டியிலும், ஆசியக் கிண்ணப்போட்டியிலும் கலந்துகொண்டு வெற்றிபெறுவோம் என்கிற நம்பிக்கையில் இருக்கின்றோம். இந்தப் போட்டி எங்களுக்குப் பெரிய நம்பிக்கையைத் தந்திருக்கின்றது. எங்களின் மகளிருக்கும் கால்பந்தாட்டம் விளையாடத்தெரியும் என்பதை நாம் உலகிற்கு காட்டியுள்ளோம். ஆண்களுக்கு தெரியும் என்பதைக் கடந்தவருடம் ஆசியக் கிண்ணத்தை வென்றதன் ஊடாக உலகிற்கு வெளிக்காட்டினோம். இந்த வருடம் மகளிருடன் இறுதிப்போட்டிவரைக்கும் போயிருக்கிறோம். இதனூடாக உலகிற்கு ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறோம். இது பெரியதொரு பாய்ச்சல்.

**கேள்வி: கடினமான இந்த விளையாட்டிற்கு பெண் பிள்ளைகளை கொண்டுவரவும், சிறப்பாக செயற்படவும் எத்தகைய உத்திகளைப் பயன்படுத்தினீர்கள்?**

பதில்: பந்து வைத்திருக்கும்போதிலும் சரி, பந்தினை வைத்திருக்காத போதிலும், என்னென்ன செய்ய வேண்டும் என அதிக அறிவுறுத்தல்களை வீராங்கனைகளுக்கு வழங்கினோம். வீராங்கனைகளை உற்சாகப்படுத்தும் விதமாக அதிக செயலூக்கப் பயிற்சிகளை வழங்கினோம். எங்களின் வீராங்கனைகள் அதிக தெளிவும், பக்குவமும் பெற்றவர்கள். எங்களின் மாவீரர்களையும், எங்களின் நாட்டுப்பாற்றாளர்களையும் எங்களின் நாட்டையும், உங்களின் பெற்றோரையும் நினைத்து விளையாடுங்கள் என அறிவுரைப்படுத்தினோம். அனைத்துவிதமான நேர்மறையான சிந்தனைகளுடனும் விளையாடும்படிக் கேட்டுக்கொண்டோம். அப்படி விளையாடும்போதுதான் வெல்வோம் என்கிற நம்பிக்கை பிறந்தது. எங்களின் வீராங்கனைகளை நினைத்து நாம் உண்மையாகவே பெருமைப்படுகின்றோம். இதுவொரு சிறு குறும்படம்தான். எங்களின் வீராங்கனைகள் மிகச் சிறியவர்கள். அதிக பயிற்சியும், உழைப்பும் அவர்களை சர்வதேச வீரர்களாக மாற்றும் எனத் தமிழீழ அணியினராகிய நாம் நம்புகின்றோம்.

# “என் தாய்நாட்டுக்கான போராட்ட வடிவமாக...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதுவே இன்று தமிழீழத்திற்கான அணிக்கு விளையாடுமளவிற்குக் கொண்டுவந்து சேர்த்திருக்கின்றது.

**கேள்வி: அங்கீகாரமற்ற நாடொன்று அங்கீகாரம் பெறுதலுக்கான முதல் முயற்சியாகக் களத்தில் நிற்கிறீர்கள். இந்த நிலையை எப்படி உணர்கிறீர்கள்?**

பதில்: தமிழீழ அங்கீகாரத்திற்காக நாம் அதிக முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கின்றோம். அதிலும் தமிழீழ மகளிர் அணியினர் கால்பந்தாட்டத்தில் முதற்தடத்தை வைத்தமையானது மிகப் பெருமிதமானதொரு தருணம். மிகுந்த மகிழ்ச்சியான தருணம். இனவிடுதலைக்காக விதையான பல்லாயிரக்கணக்கான மாவீரர்களின் நினைவோடும் பொதுமக்களின் நினைவோடும்தான் களத்தில் இறங்கினோம். எனவே எங்களுக்கு அந்த நேரம் மிகவும் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருந்தது. அந்நேரத்தில் எங்களின்தமிழீழத்தைத்தவிரவேறெதையும்எங்களால்நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.இறுதிப்போட்டியில் அதிகம் போராடினோம். அதில் இரண்டாவது இடம் கிடைத்தாலும்கூட அதை நாம் மிகப்பெரிய வெற்றிப்படியாகவே பார்க்கிறோம்.

# Sai Shree Foods
Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# நீதியின் வடிவங்கள்

சியாமளா யோகேஸ்வரன்

“வசந்தா, வசந்தா” தவத்தின் உரத்த குரல் பக்கத்து வீடு, அடுத்த வீடு என்று வீடுகள் தாண்டி அந்த வீதிக்கே கேட்கும் படியாக இருந்தது. மதிய உணவை மற்றைய மூன்று பிள்ளைகளும் சாப்பிட்டு விட்டிருந்தார்கள். வசந்தன் மட்டும் இன்னமும் சாப்பிட வரவில்லை. அவனுடைய ரலி சைக்கிள் வீட்டு முற்றத்தில் நின்றது. அவன் வீட்டுக்குள்ளே தான் இருக்க வேண்டும் என்பதில் தவத்துக்குச் சந்தேகமில்லை. வழமையாக ஏதாவது குறும்புத்தனம் செய்து விட்டுத்தான் இப்படிச் சத்தமின்றிப் பதுங்கியிருப்பான். அண்ணன்மார் இருவரும் அவனுடன் வம்பு தும்புக்குப் போயிருக்க மாட்டார்கள். இவன் தான் ரேடியோவையோ சைக்கிளையோ கழற்றிப் பூட்டுவதாகச் சொல்லி ஏதாவது குளறுபடி செய்து வைத்திருப்பான். வீட்டில் இருக்கும் அத்தனை பேரினதும் சைக்கிளில் இருக்கும் ஹெட்லைட், டைனமோ என்று எல்லாவற்றையும் கழற்றி வைத்து ஆராய்ந்து கொண்டிருப்பான். அவை வேலை செய்யாமல் போகும் வேளைகளில்தான் சிக்கலில் மாட்டிக் கொள்வான்.



அக்கா மாலதியைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவளுக்கு இவன் செல்லம். என்ன திருகுதாளம்செய்தாலும், மறைத்து வைத்துக் காப்பாற்றி விடுவதும் அவள் தான். அப்பா கண்டிப்பு தான். ஆனால் அவர் இன்னமும் வீட்டுக்கு வரவில்லையே? எதைச் செய்து விட்டு எங்கு ஒளிந்து கொண்டிருக்கின்றான் தெரியவில்லை என்று மனம் பதற்றப்படும் போது கற்பனைகளும் கண்டபடி விரிய தவம் இன்னும் பதறினாள்.

இவள் மாலதி வீட்டில் தானே நிற்க வேண்டும். இத்தனை கத்துகின்றேன். அவளுடைய காதிலும் விழவில்லையா? தவத்துக்கு இப்போது கோபம் வந்தது.

“மாலதி. அடியே மாலதி” பதில் வராமல் போக இதயத்துடிப்பு இன்னமும் எகிறியது. கையில் கிடைத்த பூவரந்தடியை எடுத்துக் கொண்டாள். யாராவது கையில் மாட்டட்டும் என்று கறுவிக்கொண்டே கண்களை அங்குமிங்கும் சுழற்றியதில் மாலதியின் பூப்போட்ட சட்டையின் ஓரம் காருக்குப் பின்னால் தெரிந்தது. சத்தம் போடாமல் அடிவைத்து மறுபக்கமாகப் போனவள் ஓட முற்பட்ட மாலதியின் காதுகளைப் பிடித்துக் கொண்டாள். வலியால் அலறியவளைக் கண்டு கொள்ளாமல்,

“எங்கேடி வசந்தன்?” உறுமலாகவே கேட்டாள்.

“தெரியேல்லை அம்மா, வலிக்குது. காதை விடுங்கோ” மாலதி பொய் சொல்வது குரலில் அப்படியே தெரிந்தது. எங்கிருந்தோ டீசலின் மணம் குப்பென்று மூக்கினுள் ஏறிக் கொண்டிருந்தது. தேடி அலைந்த கண்களுள் காரின் அடியில் இருந்த டீசல் கான் ஒன்று சிக்கிக் கொண்டது. சிந்தனையுடன் அதைக் கையில் எடுத்துக் கொண்ட படி,

“வசந்தன், வெளிய வா” தாயின் குரலில் இருந்த அச்சுறுத்தும் தொனியில் காருக்குள் மறைந்திருந்த வசந்தன் வெளியே வந்தான்.

“என்னடா இங்கே கூட்டுச்சதி நடக்குது?”

“அம்மா, இரண்டு அங்கிள்மார் பைக்கில டீசல் இல்லாமல் வெளியால நிக்கினம். கையில காசும் இல்லையாம். பார்க்கப் பாவமாய் இருந்தது, அதுதான்” பதினெட்டு வயதாகிய இளந்தாரிப் பையன் போலன்றி அன்பால் உருகக்கூடிய பச்சிளம் பாலகனாய் பேசும் மகனைத் திட்ட தவத்துக்கு மனம் வரவில்லை.பிளாஸ்டிக் குழாயொன்றைக் காரின் டீசல் தாங்கிக்குள் செலுத்தி வாயால் உறிஞ்சி டீசலை வெளியே எடுத்து, அதை வைத்து அரைவாசிக் கானை நிரப்பியிருக்கின்றான்.

“ஏண்டா, உனக்கு அப்பா பாவம் என்று தோணவில்லையா? அப்பாவும் காசு கொடுத்துத் தானே டீசல் அடிச்சவர்?” மகனின் இரக்க செயலில் நெகிழ்ந்தாலும் அப்படியே விட்டு விடக் கூடாது என்பதற்காக நியாயம் கேட்டாள்.

“அப்பாட்ட காசு இருக்குது, அதோட இப்ப உடனடித் தேவைக்குக் கொஞ்சமாய் தான் எடுத்தனான்” நியாயமும், நிலைமையும் புரிந்து பேசுபவன் ஞானம் போதித்த முருகனாகவே தெரிந்தான்.

“சரி குடுத்திட்டு வா.. இனி மேல் இப்படிச் செய்யக் கூடாது.” போனவன் பைக்காரர்களுடன் வந்தான்.

“தாங்ஸ் அன்ரி.. நல்ல பிள்ளையைப் பெத்திருக்கிறீங்கள். நாங்கள் பிறகு டீசலைக் கொண்டு வந்து தர்றோம்.” பைக்காரர்களின் வார்த்தையில் பெற்ற மனம் குளிர்ந்தது.

சாப்பாட்டை அவசரமாய் அள்ளி விழுங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தாள். இத்தனை நேரம் அவனுக்குப் பசி கூடத் தெரியவில்லை என்பதில் தவம் நெகிழ்ந்தே போனாள். அடுத்தவரை நேசிக்கும் குணம் எங்கிருந்துதான் வந்ததோ தெரியாது! கோயிலுக்குப் போனாலும் கச்சான் வாங்க எனக் கொடுக்கும் காசை கோயில் வாசலில் அமர்ந்து பிச்சை எடுப்பவர்களுக்குக் கொடுத்து விடுவான். பென்சிலின் அடிக்கட்டையை பேனை மூடியில் செருகி வைத்துப் பாவித்து இனி எழுதவே முடியாது என்ற நிலையில் உள்ள நண்பனுக்குத் தன் பென்சிலைக் கொடுத்து விடுவான். பென்சில் தொலைந்து விட்டது என்று வீட்டில் காரணம் சொல்வான். தருமம் என்று கேட்டு யாரும் வந்தால், இருக்கும் சில்லறைகளைக் கொடுத்து விடுவான். வங்கியில் வேலை செய்யும் தந்தை எல்லோருக்கும் உண்டியல் கொடுத்து, அதில் சேமிக்கப் பணமும் கொடுப்பார். வசந்தனின் உண்டியல் எப்போதும் வெறுமையாகவே இருக்கும். அதைப் பார்த்துப் பொறுக்காமல் தவம் அவ்வப்போது இருக்கும் சில்லறைகளைப் போட்டு வைத்தாலும், அதுவும் தங்காமல் மறைந்து விடும். அடுத்தவரின் நலனுக்காகச் சிந்திக்கும் சின்னப்பையனின் போக்கு அவளுக்கு விசித்திரமானதாக இருக்கும். அந்த அன்பு, வீட்டில் வளர்க்கும் ஆடு கோழிகளைப் பராமரிக்கும் விதத்திலும் புலப்படும். என் பிள்ளை எப்போதும் நல்லது மட்டுமே செய்வான் என்று அடிக்கடி தனக்குள் எண்ணிப் பெருமைப்பட்டுக் கொள்வாள்.

படிப்பில் சோடை போகவில்லை என்றாலும், எதையாவது கழற்றிப் பூட்டுவதில் வசந்தனுக்கு ஆர்வம் இருப்பதைக் கண்ட தந்தை இயந்திரவியலாவது படியேன் என்று சொல்லிக் கொண்டிருக்க, அவனை வெளியில் ‘நோட்டீஸ்’ கொடுக்கக் கண்டதாக மாலதி சொன்ன போது தவம் பதறியே போனாள்.

“தம்பி உந்த வேலையெல்லாம் பார்க்காதயணை, கெட்ட சகவாசம் உன்னை அழிச்சுப் போடும். உயிருக்கும் ஆபத்தாகிப் போடும்” அழுகையுடன் சொன்ன தாய்க்குப் பதில் சொல்லவில்லை. அடுத்த நாளே அவர்களை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து விட்டான்.

“அன்ரி, வசந்தன் சொல்லுக் கேட்காட்டிச் சொல்லுங்கோ. நாங்கள் அவனைச் சேர்க்க மாட்டம்” அவர்களின் பணிவிலும், மரியாதையான பேச்சிலும் உருகிப் போன தவத்துக்கு மகன் கெட்ட வழியில் போகவில்லை என்பது தெளிவாகவே புரிந்தது.

“இல்லடா தம்பிமார், இனிச் சொல்ல மாட்டன், சாப்பிடுங்கோ” என்று உடனே செய்த பனங்காய்ப்பணியாரத்துடன் உபசரித்தாள். பெற்றதும் பெறாததுமாய் அவளது பிள்ளைகளின் எண்ணிக்கை அன்றுடன் அதிகரித்து விட்டிருந்தது. அவர்களின் நலனுக்காகவும் சேர்த்துப் பிரார்த்தித்தாள். எந்நேரமானாலும் வீட்டுக்கு வந்து விடுபவன், வீட்டுக்கு வராமலேயே விட்ட போது தாயின் உள்ளம் பரிதவித்தது. 83ம் ஆண்டுக் கலவரமும், தமிழர்களின் படுகொலையும் அவனுக்குள் தணியாத தணலை உருவாக்கியிருக்க வேண்டும். கொள்கைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து விட்டான். ஒரு வருடம் உருண்டோடிய பொழுதில் ஒருநாள் வீட்டுக்கு வந்தவன், தாயுடன் அமர்ந்திருந்து ஆறுதலாகப் பேசிக் கொண்டிருந்தான்.

“தம்பி, உனக்கு ஒரு உயிரையும் கொல்ல மனம் வராதேடா. ஒரு பூச்சியைக் கூடக் கொல்லாமல் பிடிச்சுக் கொண்டு போய் மரத்திலை பத்திரமாய் விடுவாய். இப்ப எப்படியடா இன்னொரு உயிரைக் கொல்லலாம் என்று கிளம்பியிருக்கிறாய்?”

“அம்மா பூச்சி எங்களைக் கடிக்க வரேல்லை. இடம் மாறி வந்ததுக்கு வழி காட்டலாம், ஆனால் இடம் தேடிக் கடிக்க வாற பாம்புக்குப் பாவம் பார்க்கக் கூடாது. “

“எண்டாலும் தம்பி, உனக்கு ஒண்டு என்றால் நான் தாங்க மாட்டன்.”

“அம்மா நான் இன்றைக்கு பைக்கிலை போகேக்கை ஏதாவது நடந்தும் செத்துப் போகலாம் தானே?”

வசந்தன் சொல்லி முடிக்க முன்னர், அவனது வாயைப் பொத்திய தவம் விசும்பினாள்.

அவளது கைகளை விலக்கியவன், “அம்மா, சாவு நிச்சயம், நான் பிறந்ததிலை எந்தப் பலனுமே இல்லாமல் செத்தால் தான் நீங்கள் கவலைப்படவேணும், என் சாவிலை ஏதோ ஒரு அர்த்தம் இருக்குது என்றால் நீங்கள் கவலைப்படக் கூடாது.” அழுத்தமாய் சொன்னதன் அர்த்தம் புரிந்து ஆற்ற முடியாமல் தவம் கொஞ்ச நேரம் அழுது கொண்டு தானிருந்தாள்.

புறச்சூழல் நன்றாகவே இருக்கவில்லை. தமிழரின் அவலங்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. சிறிய குழு ஒன்றால் நீண்ட நாட்களுக்கு இராணுவத்தை முகாமுக்குள் முடக்கி வைக்க முடியவில்லை. முகாமுக்குள் இருந்து முழங்கிய ஷெல்கள் தமிழரின் உயிரைக் குடித்தும், அவர்களின் வெறி அடங்கவில்லை. முற்றுகையை உடைத்து வந்து தமிழரின் இரத்தத்தைக் குடிப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு ‘ஒப்ரேசன் லிபரேசன்’ என்று பெயரிடப் பட்டது.

இராணுவம் பல முனைகளில் இறக்கி விடப்பட்டு வடமராட்சியின் அத்தனை பகுதிகளையும் குறி வைத்து முன்னேறிக் கொண்டிருந்தது. புரட்சி பிறந்த மண்ணை புரட்டிப் போட வேண்டும் என்பது அவர்களின் முதன்மை இலக்காக இருந்தது. கோயில்களிலும் பாடசாலைகளிலும் அடைக்கலம் பெறுமாறு கூறிய துண்டுப்பிரசுரங்கள் ஹெலிகொப்டரில் இருந்து வீசப்பட்டன. முடக்கி வைத்த மக்களை மும்முனைகளிலும் இருந்து குண்டு போட்டுக் கொலை செய்தார்கள் அல்லது அங்கவீனம் ஆக்கினார்கள். மருத்துவ வசதியின்றி மடிந்தோர் பலர். சிறிய குழுவைக் கொண்ட விடுதலை வேங்கைகளால் பெரும் படையணியை எதிர்த்து நிற்க முடியவில்லை. முடிந்தளவு சேதத்தை விளைவித்துக் கொண்டு பின்வாங்கினார்கள்.

முன்னேறிய இராணுவம், கண்ணில் பட்டவர்களை எல்லாம் சுட்டுக் கொன்றது. சித்திரவதை செய்து எரித்தார்கள். வீட்டில் தங்கியிருந்தவர்களில் இளைஞர்களை அவர்களின் பெற்றோரின் முன்னால் சுட்டுத் தள்ளினார்கள்.

(17ஆம் பக்கம் பார்க்க)

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

அம்மன் கோயில் ஒன்றில் அடைக்கலமாயிருந்தவர்களின் மேல் விழுந்த குண்டினால் பெருந்தொகையானோர் இறந்திருந்தார்கள். அம்மன் கோயில் வளவு பிணங்களால் நிறைந்திருந்தது. மற்றைய கோயில்களில் தஞ்சம் புகுந்திருந்தவர்களில் இளைஞர்களைக் கைது செய்து சித்திரவதைக் கூடமான பூசாவுக்குக் கொண்டு சென்றார்கள். தமிழனாய் பிறந்ததற்காக அவர்களின் வாழ்க்கை அரைகுறையாய் முடிய வேண்டும் என்று பிரமன் எழுதி வைத்திருக்க வேண்டும். அவர்களில் பலர் அதன்பின் திரும்பவேயில்லை.

அந்த நடவடிக்கை முடிந்த சில நாட்களுக்கு மனித உடல்கள் மட்டுமல்லாமல் குண்டு விழுந்து இறந்து போன ஆடு, மாடு நாய் போன்றவற்றின் பிணவாடையால் வடமராட்சி வலயம் நிறைந்திருந்தது.

கோயிலில் அடைக்கலம் புகுந்திருந்த போதும், தவத்தின் மனம் வசந்தனையும் அவனது தோழர்களையுமே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. அங்கங்கே நம்பிள்ளைகளும் மடிந்திருக்கின்றார்கள் என்பது தெரியுமே தவிர மேலதிக விபரம் தெரியவில்லை. சாப்பிட்டானா தூங்கினானா என்று தாயின் மனம் தவித்துக் கொண்டிருந்தது. வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய இளம்வயதில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மரணபயத்துடன் வாழும் இளைஞர்களைப் பார்க்கையில் வீரம் செறிந்த தன் மகனைப் பற்றிய கவலை அர்த்தமற்றது என்றும் தோன்றியது.

அந்த நடவடிக்கையின் பின் நெல்லியடி மகா வித்தியாலத்தில் பெரிய இராணுவ முகாம் ஒன்றை அமைத்திருந்தார்கள். பதுங்கு குழிகளையும் பாதுகாப்பு அரண்களையும் வரிசையாக அமைத்து, அதிகளவிலான இராணுவத்தைக் கொண்ட பாதுகாப்பு மிக்க முகாம் என்று கேள்விப்பட்டிருந்தாள் தவம். அங்கிருந்து முன்னேறி வலிகாமப் பகுதியைக் கைப்பற்றுவதற்காகவே இம்முகாம் இடையில் அமைக்கப்பட்டுள்ளதாயும் அறிந்திருந்தாள். வயதுப்பிள்ளைகள் எல்லோரும் உயிர்ப்பயத்தால் ஊரை விட்டு இடம் பெயர்ந்து விட்டிருந்தனர். வீட்டில் இப்போது தவமும் கணவரும் மட்டுமே எஞ்சியிருந்தனர். வசந்தனால் முன்பைப் போல் மறைவாகவும் வீட்டுக்கு வர முடியவில்லை. தவத்துக்கு வசந்தனைப் பார்க்க வேண்டும் என்ற தவனமாகவே இருந்தது.

இப்போதெல்லாம் நேரத்துடனே ஆடுகளுக்குக் குழையைக் கட்டி விட்டு, கோழிகளையும் கூட்டுக்குள் அடைத்து விடுவாள். மண்ணெயில் எரியும் விளக்கைக் கண்டு வில்லங்கம் வந்து விடக் கூடாதென்று நேரத்துடனேயே சாப்பிட்டு விட்டு விளக்குகளை அணைத்து விடுவார்கள். தலைக்குள் ஓராயிரம் கவலைகள் அடைந்திருக்கும் போது தூக்கம் மட்டும் உடனே வந்து விடுமா? உள்ளே புழுக்கமாய் இருந்தாலும், வெளியே போய் காற்று வாங்க அச்சமாயிருந்தது. என்ன வாழ்க்கையடா என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே வெளியே சரசரவென்று இலைகள் மிதிபடும் சத்தமும், வெளிக் கதவு 'கிறீச்' என்ற ஒலியுடன் திறக்கப்படும் சத்தமும் சன்னமாய்க் கேட்டது.

"குறுக்காலை போவாங்கள். இண்டைக்கு இந்த நேரம் வெளிக்கிட்டு எத்தினை பேரை அமுக்கப்போறாங்களோ தெரியேல்லை" வாய் விட்டுச் சொல்லப் பயத்தில் மனதுள்ளே தான் திட்டிக்கொண்டாள் தவம். இவள் மூச்சை விட அச்சப்படக் கணவன் பெருஞ்சத்தத்துடன் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான்.

"இஞ்சரப்பா சத்தம் போடாதேங்கோ, கதவைத் தட்டப் போறாங்கள்" தவம் மெதுவாகக் கணவனை உலுப்பியபடி சொல்ல, குறட்டைச்சத்தம் நின்றது. கணவனும் விழித்து விட்டார் என்று புரிந்த நொடி, கதவில் மெதுவாக விறாண்டுவது போன்ற ஒலி கேட்டது. தவத்துக்கு அச்சத்தில் வியர்த்து விறுவிறுத்தது. கணவனின் கைகளை இறுகப் பிடித்த போது, அவன் கைகளும் குளிரால் சில்லிட்டுப் போயிருப்பதை உணர்ந்தாள்.

உயிர்ப்பயம் என்பது அதுதானா? சாகப் போகின்றோம் என்பது தெரிந்து விட்டால் உடலே இயங்க மறுக்கிறதே? உயிரைக் காப்பாற்ற என்ன செய்யலாம் என்று தானே சிந்தனை ஓடுகின்றது.

"அம்மா" கன்றின் குரல் கேட்ட பசு போல் தவம் பாய்ந்து எழுந்து கொண்டாள். கைகளைப் பிடித்திழுத்த கணவனின் கைகளை உதறி விட்டுப் பறந்து சென்று கதவைத் திறந்தாள்

வசந்தனும் அவனுடைய இன்னொரு நண்பனும் வெளியில் நின்றது பிறை வெளிச்சத்தில் தெரிந்தது. "தம்பிமார் உள்ள வாங்கோடா முதல்ல" தவம் வசந்தனைப் பிடித்த கையை விடவில்லை. முகத்தைப் பார்க்க முடியாத இருட்டு. ஆனாலும் விரல்களால் முகம் முழுவதும் தடவினாள். புதிதாக முளைத்திருந்த மீசை கைகளில் குத்தியது. இரண்டாவது தடவை வருடி மூன்றாவது முறையும் அடங்காமல் வருடியபோது அவன் கன்னங்களின் ஈரத்தை கைகள் உணர்ந்தன. அவள் கன்னங்களிலும் கண்ணீர் உருண்டோடியது. வாய் விட்டுக் கதைக்க முடியாத நிலையில் சத்தம் போட்டு அழவா முடியும்.

"தம்பி ரீ போடட்டே?"

"போடுங்கோ அம்மா" வசந்தனும் கிசுகிசுத்தான்.

"பைத்தியமா உனக்கு? வெளிச்சத்தைக் கண்டு உங்கன பதுங்கியிருக்கிற 'அவன்' வந்திட்டால் அவ்வளவுதான்" தந்தை எச்சரித்தார்.

"ஓமம்மா வேண்டாம், நான் வெளிக்கிடுறன்"

பிள்ளைக்கு ஒரு ரீ கூடப் போட்டு தரமுடியாத நிலை தவத்துக்குப் பெரும் வருத்தத்தைக் கொடுத்தது. வசந்தன் கிளம்பி விட்டான். அவன் சுகமாய் போய் சேர வேண்டும் என்ற வேண்டுதலுடன் அமர்ந்திருந்த தவத்தால் அதன்பின் தூங்க முடியவில்லை.

# நீதியின் வடிவங்கள்

நினைத்த நேரம் ஊரடங்கு என்றார்கள். நினைத்த போது தமிழனின் இரத்தத்தால் பசியாறினார்கள். வெறியாட்டம் ஆடும் போதெல்லாம் இவர்களை அடக்க ஒரு காலம் வரும். 'அவர்கள்' வருவார்கள் என்றே மக்கள் காத்திருந்தார்கள்.

நெல்லியடி முகாமை அழிப்பது தான் தொடர இருக்கும் தொடர்கொலைகளையும் ஆக்கிரமிப்பையும் தடுக்க ஒரே வழி என்று தலைவரும் சிந்தித்திருந்தார். ஐம்பது என்ற எண்ணிக்கையில் அடங்கி ஒளித்து வாழும் குழுவால் பெரிய இராணுவத்தை என்ன செய்ய முடியும் என்றே எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் தமிழருக்காகப் போராடித் தாய் நிலத்தை மீட்க வேண்டும் என்ற தாகத்துடன் இருப்பவரின் கணக்கு வேறாக இருந்தது. ஒருவனால் பலரைக் கொல்ல வேண்டும் என்றால் அதற்கு அவன் தன்னைக் கொடையாகத் தரவேண்டும் என்ற ஒரு புது எண்ணம் தோன்றியதும் அந்தச் சிந்தனையின் பின்னணியில் தான். உயிரைக் காக்க எண்ணுவது தான் இயற்கையின் சித்தாந்தமே தவிர, வாழ வேண்டிய வயதில் அச்சமின்றிப் பகைவனைத் தேடிச் சென்று உயிரைக் கொடுப்பது என்பது சாதாரண மனிதனின் கற்பனைக்கும் அப்பாற்பட்டது. ஆனாலும் தமிழர் பிரதேசங்களில் நடந்த சம்பவங்கள், எதையாவது செய்தே ஆக வேண்டும் என்ற உந்துதலைக் கொடுத்திருந்தன.

மென்மையான மனம் கொண்ட வசந்தன், தானே அந்தப் பணியை முன்னெடுக்கப் போவதாய் ஒற்றைக் காலில் நின்றான். பகைவனின் முற்றத்தில் நின்றபடியே வெடி மருந்துகளைச் சரி பார்த்து வண்டியில் நிரப்பினான். பார்த்துக் கொண்டிருந்த நண்பன் பிரபுக்குத் தொண்டைக்குழியை அடைத்தது. சாவைக் கண்டு அஞ்சாதவர்கள்தான் அவர்கள். சாவினைத் தோள் மீது சுமப்பவர்களுக்கு இழப்புகள் புதியனவல்ல. ஆனாலும் தொடராய் பாதுகாப்பணி அமைத்துக் காவலைக் கெடுபிடியாக்கி வைத்திருக்கும் இராணுவத்தைத் தாண்டி செல்ல வேண்டும். அவர்கள் போட்டு வைத்திருக்கும் வீதித்தடைகளைத் தாண்டி வாகனம் செல்ல வேண்டும். அதற்குள் சுதாரித்துக் கொண்டு தாக்கும் எதிரியின் பின்னணித்தாக்குதலில் இருந்து தப்பிக்க வேண்டும். எதற்காக இந்த முயற்சி? அர்த்தமே இல்லாமல் நண்பனை இழக்க வேண்டி வருமோ என்ற கவலையில் பிரபுவின் முகம் சோர்ந்திருந்தது.

"என்னடா பிரபு. பியூஸ் போனவன் போல இருக்கிறாய்? முதுகிலை கால் அடிபட ஓடுறவனைப் பார்க்க வேணும் எண்டு உனக்கு ஆசையில்லையோ?" முகத்தில் முறுவலுடன் கேட்ட வசந்தனின் குரலில் வழமையான உற்சாகத்தில் ஒரு துளியும் குறைவிருக்கவில்லை.

"இஞ்சடா, நீ வாகனத்தை கிட்டக் கொண்டு போய் விட்டுட்டு குதிச்சு வந்திடு என்ன? நானும் அங்க உனக்காகக் காத்துக் கொண்டிருப்பன், சரியோ" பிரபுவின் குரலில் சுரத்து இருக்கவில்லை.

"சரிடா சரி! நீ யோசிக்காதை" சொன்ன வசந்தன் வெடி மருந்தேற்றிய வண்டியைச் சரி பார்த்தான்.

வழியில் இருக்கும் தடைகளை உடைக்கும் தாக்குதல்கள் தொடங்கி விட்டிருந்தன. வண்டியைக் கொண்டு சென்று தாக்கி நினைத்ததை நிறைவேற்றும் நிலை ஒன்று வரும் என்ற நம்பிக்கை பெரிதாக இருக்கவில்லை. ஆனால் வசந்தன் மட்டும் உத்தரவை எதிர்பார்த்து உறுதியாய் காத்திருந்தான். தடைகள் விலக்கப்பட்டு இவன் அழைக்கப்பட்டான். உறுதியான வேகத்துடன் வாகனம் சென்று கொண்டிருந்தது. தன்னைக் கொடையாக்கி விடுதலைக்கு வித்தாகும் வீரத்துடனும், சாவுக்கு அஞ்சாத தன்னம்பிக்கையுடனும் ஒருவன் அந்த வண்டியை ஓட்டி வருவான் என்று எதிராளி கனவிலும் நினைத்திருக்க மாட்டான். அப்படியும் எதிரியின் குண்டுகள் வசந்தனின் உடலைக் குறி பார்த்தன. ஆனாலும் அவன் பயணம் நிற்கவில்லை. வசந்தன் கொண்ட இலக்கு உயர்வானது, ஒரு இனத்தின் விடுதலைக்கும் பாதுகாப்புக்குமானது. தம்பி எப்பவும் நல்லதைத் தான் செய்வான் என்று நம்பும் ஒரு தாயின் வளர்ப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துவது. வெடிகளுடனான வண்டி வெடித்துச் சிதறியதில் நாற்பது வரையிலான எதிராளிகள் இறந்தனர். எஞ்சியவர்கள் தம் உயிர் காக்க வயல் வெளிகளில் இறங்கித் தப்பி ஓடினர்.

இடிமுழக்கம் போன்று அதிர்ந்த வெடியில் ஊரே விழித்துக் கொண்டது. தவத்தின் காதுகளிலும் அந்த ஓசை விழுந்தது.

"நெல்லியடிக்காம்பைப் பெடியள் அடிச்சிருக்கிறாங்கள் போல, அந்தப்பக்கம் தான் சத்தம் கேட்குது. எங்களைப் படுத்திற பாட்டுக்கு இவங்களுக்கு நல்லாக் குடுக்க வேணும்." கணவனுக்குச் சொல்லி விட்டுப் புரண்டு படுத்தாள்.

தூக்கம் ஏனோ வர மறுத்தது. சரசரவென்ற சத்தம் வெளியில் கேட்க, வசந்தன் தானோ என்று உள்ளம் துடிக்க எழுந்து அமர்ந்து கொண்டாள். அம்மா என்று அவன் அழைக்கப் போகும் குரலுக்காக அவள் காதைத் தீட்டியபடி காத்திருந்தாள். காற்றில் கரைந்து விட்ட வசந்தனின் இறுதிக்குரல் "அம்மா" என்பதாகஇருந்திருக்குமா என்பதும் சந்தேகமே!

மறுநாள் நெல்லியடியே மயானமாகக் காட்சியளித்தது. மக்கள் அச்சத்துடன் ஊருக்குள் நடமாடினாலும், நல்ல பாடம் புகட்டியிருக்கின்றார்கள் என்று உள்ளுக்குள் மகிழ்ந்து கொண்டார்கள். மெல்ல மெல்ல நடந்த சம்பவம் ஊரெங்கும் பரவத் தொடங்கியது. கேட்டவர்கள் திகைத்து நின்றார்கள். இவர்களுக்குள் இத்தனை உறுதியை விதைத்தவன் யார் என்று மலைத்து நின்றார்கள். தவத்தின் காதுகளுக்கும் செய்தி வந்து கிடைத்தது. பெற்ற மனம் பித்து என்பதாக அழுதாலும், மகனது சாவு மற்றவர்களைப் போன்ற அவச்சாவாய் இல்லாமல் அர்த்தம் நிறைந்தது என்று தன்னைத் தேற்றிக் கொண்டாள். ஊருக்குத் தெரிந்தால் ஒற்றர்கள் மூலம் பிரச்சனை வரலாம் என்று வீட்டவர்கள் உள்ளுக்குள் ஊமையாக அழுது கொண்டார்கள்.

பக்கத்து வீட்டுச் சிறுமி சுஜி இவர்கள் வீட்டு மாமர ஊஞ்சலில் ஆடியபடி சமயப்புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தாள். வசந்தனும் அப்படித்தான் படிப்பான். அவனது நினைவுகள் பொங்கி வந்தன. இறுதியில் அவன் முகத்தை ஒரு தடவை கூடப் பார்க்க முடியவில்லை. தவத்துக்கு துக்கத்தில் தொண்டை அடைத்தது.

"அன்பே சிவம்" அறுத்து வாசித்தாள் சுஜி. தவத்துக்கு வசந்தன் சொன்ன விளக்கம் ஞாபகத்துக்கு வந்தது. அன்பைக் கொட்டிய என் பிள்ளை இப்போது கொலைகாரனாகி விட்டானா? எத்தனையோ பெண்களை வன்முறை செய்த, பெற்றவரைக் கொன்று பிள்ளைகளை அநாதை ஆக்கிய, பிள்ளைகளைக் கொன்று பெற்றோரைப் பிரிவு அனலில் வாட விட்ட, வாழ வேண்டிய வயதில் கைம்பெண்ணாக்கி மூலையில் முடங்க வைத்தவனுக்குத் தண்டனை கொடுக்கும் நீதிபதியின் கைகளில் பாவத்தின் கறைகளாக படிந்திருக்கின்றன? தப்புச் செய்த குருவையும், உறவையும் கொல்லலாம் என்று போதித்தவன் பரமாத்மா ஆகி விடவில்லையா? தப்பைத் தட்டி யாரும் கேட்கலாம். கேட்காதவன் மனிதனே இல்லை. தவத்தின் மனம் தெளிந்தது. "என் பிள்ளை எதையும் நல்லதுக்குத்தான் செய்வான்" வாய் விட்டுச் சத்தமாகவே சொல்லி விட்டு நிமிர்ந்து நடந்தாள் தவம். காற்றில் கரைந்தவனின் நினைவுகளைக் காலம் பதிவு செய்து செய்து கொண்டது.

■


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI

ஆடி 2024



# இனியும் போராட வேண்டும்!

● கருணாகரன்

அரசியலில் பிரதானமாக இரண்டு வகைகள் உண்டு. ஒன்று, சமூக மீட்புக்கான அரசியல். இதனை மக்கள் நலன் அரசியல் என்பர். மக்களுடைய நலனுக்காகத் தம்மையும் தமது கட்சி அல்லது இயக்கத்தையும் அர்ப்பணித்துச் செயற்படுவது. இதில் மக்களும் அவர்களுடைய நலன்களும் தேவைகளுமே முதன்மைப்பட்டிருக்கும். இதனுடைய உச்சமாக மக்களுக்கெனத் தம்மையும் தம்முடைய உயிரையும் அர்ப்பணித்துச் செயற்படுவதாகவே விடுதலைப்போராட்ட அரசியல் இருந்தது.

இந்த அரசியல் தோற்றுப் பின்னடைந்தாலும் மக்கள் இந்த அரசியலை முன்னெடுத்தோரை மறப்பதில்லை. தங்களுடைய மனதில் அதற்கான - அவர்களுக்கான இடத்தைக் கொண்டிருப்பர்.

இரண்டாவது, தங்களுடைய நலன்களுக்காக மக்களை முன்னிறுத்திச் செய்யப்படும் அரசியல். இதையே இப்பொழுது பெரும்பாலான கட்சிகளும் தலைமைகளும் செய்து கொண்டிருக்கின்றன. மக்களுக்காகத் தியாகம் செய்வதற்கும் மக்களுக்காகச் செயற்படுவதற்கும் பதிலாக மக்கள் தமக்காகத் தியாகம் செய்ய வேண்டும், தங்களுடைய நிலைப்பாடுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கருதிச் செயற்படுவது.

இதனால் கட்சிகளும் தலைமைகளும் வளர்ந்து கொண்டும் வாழ்ந்து கொண்டும் இருக்கும் நிலை தொடருமே தவிர, மக்களும் - சமூகமும் வளர்ச்சியடைவதில்லை. பதிலாக மக்களின் (சமூகத்தின்) நிலை மேலும் மேலும் மோசமடையும்.

முதலாவதில் மக்களின் மீதான அதிகாரம் செலுத்தும் போக்குக் குறைவாக உள்ளது. இரண்டாவதில் மக்களின் மீது அதிகாரம் செலுத்தும் போக்கு தூக்கலாகக் காணப்படுகிறது. அதாவது, தாம் தீர்மானிப்பதை, தாம் விரும்புவதை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாடிருக்கும்.

இத்தகைய அதிகாரப் போக்கும் மக்கள் நலனை விட்டுக் கட்சி நலன், தமது நலன் எனச் செயற்படும் தன்மையும் ஒரு கட்டத்தில் மக்களின் மனதில் வெறுப்பை ஏற்படுத்துவதுண்டு. இதுவே இப்போதைய நிலையாகும்.

தற்போதுள்ள தமிழ் அரசியற் சக்திகளிலும் தலைமைகளிலும் நம்பிக்கையிழந்து அவற்றை ஒதுக்குவதற்கு மக்கள் வந்திருப்பது மேற்படி காரணங்களினாலேயே. தமிழர்களிடத்தில் மட்டுமல்ல, இலங்கைத் தீவிலுள்ள அனைத்துச் சமூகங்களிடத்திலும் இந்த நிலையே ஏற்பட்டுள்ளது. இதனால்தான் அரகலய எழுச்சி அந்தளவுக்கு வெற்றியைக் கொடுத்தது. ஆட்சியாளர்களின் மீது மக்கள் வெறுப்படைந்ததன் அடையாளமே அது.

காரணம், மக்களுக்கு அப்பாலான, மக்கள் விரோத அரசியலை இந்தத் தரப்புகள் செய்ய முற்பட்டதேயாகும். இதனால் இலங்கைச் சமூகங்கள் அத்தனையும் இன்று நெருக்கடிகளைச் சந்தித்துள்ளன. இந்த நெருக்கடிகள் இரண்டு வகையானவை. ஒன்று தனித்தனியான நெருக்கடி. மற்றது கூட்டு நெருக்கடி.

இன நெருக்கடி, இன ஒடுக்குமுறை போன்றவற்றைத் தனித்தனியாகவும் பொருளாதார நெருக்கடி, அந்திய ஆக்கிரமிப்புப் போன்றவற்றை கூட்டாகவும் சந்தித்து நிற்கின்றன.

இதைச் சுருக்கிச் சொல்வதானால், கடந்த 75 ஆண்டுகளிலும் தலைமைகளும் அவற்றின் தரப்புகளும் (கட்சிகளும்) வெற்றியடைந்திருக்கின்றனவே தவிர, மக்கள் வெற்றியடையவில்லை. ஒரு உதாரணத்துக்குத் தமிழரின் அரசியலை நோக்கலாம். தமிழ் மக்கள் எப்போதும் - எத்தகைய இடரின் போதும் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டுக்கு ஆதரவாகவே நின்றுள்ளனர். அது யுத்த காலமாயினும் சரி, யுத்தத்துக்கு முந்திய காலத்திலும்சரி, யுத்தத்திற்குப் பிந்திய சூழலிலும் சரி தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுத்த தலைமைகளையும் தரப்புகளையுமே (கட்சிகளையும் இயக்கங்களையும்) ஆதரித்துள்ளனர். அவற்றையே வெற்றியடைய வைத்துள்ளனர்.

இப்படியெல்லாம் ஓர்மமாக நின்ற மக்களுக்கு இந்தத் தலைமைகளால் விளைந்த நன்மைகள் என்ன? மக்களுடைய எந்தப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டன? பதிலாக மேலும் மேலும் பலநூறு பிரச்சினைகள் பெருகியே உள்ளன. இப்பொழுது மாடு மேய்ப்பதற்கான மேய்ச்சற்தரைகளுக்குக் கூடப் பிரச்சினை என்ற அளவுக்கு நிலைமை வந்துள்ளது.

இதைத் திசை திருப்பும் விதமாக அவை ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு விதமாக அரச எதிர்ப்பையும் இனவெறுப்பையும் முன்னிறுத்துகின்றன. அரச எதிர்ப்பை அர்த்தபூர்வமாகச் செய்தால், அரசினால் வாலாட்ட முடியுமா? அதற்குத் தம்மை அர்ப்பணித்துக் களத்தில் இறங்கிச் செயற்பட வேண்டும். போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இதற்கு எந்தத் தரப்பும் எந்தத் தலைமையும் தயாரில்லை. இதனால் அரச எதிர்ப்பை முன்னிறுத்தித் தம்முடைய அரசியல் வரட்சியையும் பலவீனத்தையும் மறைத்துக் கொள்ள முற்படுகின்றன.

இதிற் கூட கள்ளத்தனமும் மோசடிகளும் உண்டு. பிறரைக் குற்றம்சாட்டி தாம் தப்பித்துக் கொள்வதற்காக உள்முரண்பாடுகளைக் காரணம் காட்டி, அவற்றைப் பெருப்பித்து ஒவ்வொரு அணியும் தம்மைச் சுத்தப்படுத்திக் கொள்ள முன்னிற்கின்றன. இதன் விளைவே தமிழ்த்தேசியத் தரப்புகள் இன்று பல துண்டுகளாக - அணிகளாக உடைந்து தனித்தனியாக நிற்பதாகும். அப்படியென்றால், எந்த அணி உண்மையில் தூய்மையானது - சரியானது - வீரியமானது - மக்களுக்கான விடுதலையைப் பெற்றுக் கொடுக்கக் கூடியது? என்ற கேள்வி எழுகிறது அல்லவா!

இதேநிலைதான் சிங்களத் தரப்பிலும் முஸ்லிம்களிடத்திலும் உண்டு. ஐ.தே.க - சிறிலங்கா சுதந்திரக் கட்சி என இரண்டு பெருந்தரப்புகளாக இருந்த சிங்களக் கட்சிகள் இன்று உடைந்து பல அணிகளாகப் பெருகியுள்ளன. ஐ.தே.க உடைந்து, ஐக்கிய மக்கள் சக்தி (சஜித் பிரேமதாச தரப்பு), ஐ.தே.க என இரண்டு பிரிவுகளாக உள்ளது. இதை விட சிறு சிறு குழுக்களும் அணிகளும் தனித்தனியாக உள்ளன.

மறுவளத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உடைந்து பொது ஜனபெரமுன (ராஜபக்ஸவினரின் தரப்பு) - சிறிலங்கா சுதந்திரக் கட்சி என மாறியிருக்கிறது. இந்த இரண்டு தரப்புகளிலிருந்து வெளியேறி வேறு சில அணிகளும் குழுக்களுமாக தனித்தனியாக உள்ளன.

இப்படிச் சிதறுண்டிருக்கும் அனைத்துத் தரப்புகளும் ஒரே விதமாகவே உள்ளன. இவற்றுக்கிடையில் எந்தப் பெரிய வித்தியாசங்களையும் காண முடியாது. ஆனால், ஒன்றையொன்று குற்றம்சாட்டிக் கொள்கின்றன. மற்றவர்களை விடத் தாம் சுத்தவாளிகள் என்றே ஒவ்வொரு தரப்பும் சொல்லிக் கொள்கின்றன.

மலையகக் கட்சிகளிடத்திலும் முஸ்லிம் கட்சிகளிலும் இதுதான் நிலைமை. இன்னும் ஆயிரத்தி எழுநூறு ரூபா சம்பளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத நிலையில்தான் மலையகக் கட்சிகள் இருக்கின்றன. அங்கே பல தலைமுறைகளாக வாழ்கின்ற மக்களுக்கு ஒரு துண்டு நிலத்தைப் பெற முடியாமல்தான் அத்தனை கட்சிகளும் பிரகடனங்களைச் செய்கின்றன. அவ்வாறே, முஸ்லிம்களின் பதற்றத்தைத் தணிக்கக் கூடிய அளவுக்கு ஒரு முஸ்லிம் கட்சியும் இன்றில்லை.

ஆக மொத்தத்தில் தமிழ், சிங்கள, மலையக, முஸ்லிம் கட்சிகளும் தலைமைகளும் மக்களைத் தோற்கடித்தே தம்மை வளர்த்திருக்கின்றன - நிலை நிறுத்தியுள்ளன. மக்களை எந்த நிலையிலும் இவை மீட்கவோ மேலுயர்த்தவோ இல்லை. இதனால் மக்கள் தொடர்ந்தும் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுவும் அந்தந்தச் சமூகத்தின் தலைமைகளால்.

மக்கள் வெற்றியடைந்திருந்தால் நாடு வளர்ச்சியடைந்திருக்கும். மக்களின் வெற்றியே நாட்டின் வெற்றியாக அமைவதாகும். உலகம் முழுவதும் வரலாறு முழுவதும் நிகழும் உண்மை இது.

இலங்கையில் மக்களைத் தோற்கடிக்கும் அரசியற் கலாசாரம் வளர்ச்சியடைந்ததால் நாடு தோற்றுப்போய் பின்னடைந்திருக்கிறது. இன்று நாட்டை மீட்பதற்காக உலகின் கால்களில் கடன் கேட்டு மண்டியிடுகிறார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு சீனா, இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசுகள் நாட்டின் வளங்களையும் நிலத்தையும் ஆக்கிரமித்து, அபகரிக்க முற்படுகின்றன. இது பேரபாய நிலையாகும்.

இந்தச் சந்தர்ப்பத்திற்தான் நாட்டின் மீதும் மக்களின் மீதும் பற்றுள்ளோர் தீவிரமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டியது அவசியமாகிறது. இதில் நாட்டிலுள்ளோரும் நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்தோரும் பங்களிக்க வேண்டும். படித்தோரும் வசதியுள்ளோரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.

முதலில் மக்கள் விரோதச் சிந்தனையுடைய அரசியலாளர்களிடம் கேள்வி எழுப்ப வேண்டும். அவர்கள் மாற்றத்துக்குள்ளாகக் கூடிய அளவுக்கு நெருக்கடிகளையும் நிர்ப்பந்தங்களையும் கொடுக்கலாம். அப்படிச் செய்யும்போது அவர்கள் மாற்றத்துக்குள்ளாக நல்ல வழிக்கு வருவர். அல்லது மக்கள் நலனை முன்னிறுத்திச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் தரப்புகளை அடையாளம் கண்டு அவற்றை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும். அவை சிறிய தரப்புகளாக இருக்கலாம். மக்களின் ஆதரவு அவற்றுக்குக் கிடைக்குமானால் அவை பெருச் சக்திகளாக உருவெடுக்கும். அப்படி நிகழும்போது ஒரு மாற்று அரசியற் கலாசாரமும் மாற்றுச் சூழலும் உருவாகும்.

உதாரணமாக, அடுத்து வரவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைவதற்காக சஜித், ரணில், அநுர என ஒவ்வொரு தரப்பும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒத்துழைப்பதாகச் சொல்கின்றன. இதற்குக் காரணம், இந்தத் தடவை வழமைக்கு மாறாக மும்முனைப்போட்டியை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகும். அப்படியான ஒரு நிர்ப்பந்தம் வரும்போது தவிர்க்க முடியாமல் தீர்வைப் பற்றிப் பேசுவதற்காகக் படியிறங்கி வருகிறார்கள். இதை வாய்ப்பாக எடுத்து, உடனடியாகவே - தேர்தலுக்கு முன்பே அதிகாரப்பகிர்வுக்கு முயற்சிக்க வேண்டும். அதற்கான நிர்ப்பந்தத்தை அளிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தவிர்க்க முடியாமல் ஏதோ ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலை இந்தத் தரப்புகளுக்கு ஏற்படும்.

இதைப்போல நாட்டின் பொருளாதார மேம்பாட்டை எட்டுவதற்கான செயற்றிட்டங்களை முன்வையுங்கள் என போட்டியாளர்களிடத்திலும் ஆட்சியாளர்களிடத்திலும் மக்கள் கேட்க வேண்டும். மக்கள் சார்பாக ஊடகங்களும் மக்கள் அமைப்புகளும் மதத் தலைவர்களும் புத்திஜீவிகளும் கேள்வி எழுப்ப வேண்டும். ஏறக்குறைய அரகலயவைப்போல எழுச்சிகரமான ஒரு நிர்ப்பந்தக் கட்டமைப்பே இலங்கையில் மாற்றங்களை நிகழ்த்த வல்லது.

அத்தகைய எழுச்சியை அது கொண்டிராது விட்டாலும் அத்தகைய அறிவும் உணர்திறனும் கொண்ட மக்கள் கட்டமைப்பு கிராமங்கள், பிரதேசங்கள் தோறும் உருவாகினால் - உருவாக்கப்பட்டால் நிச்சயமாக மாற்றத்துக்கான அரசியல் நிகழும். அல்லது அரசியல் மாற்றம் நிச்சயமாக நிகழும்.

இப்படித்தான் மாற்றங்களை நிகழ்த்துவதற்கு உழைக்க வேண்டியுள்ளது.

விடுதலையைக் காண வேண்டுமானால் அதற்காக நாம் கடுமையாகப் போராட வேண்டும். மாற்றங்களை நிகழ்த்த வேண்டுமானால் அதற்காகக் கடுமையாக உழைக்க வேண்டும். இதையே எதிர்பார்த்து நிற்கிறது இலங்கை. ■

# உளவுக் குற்றச்சாட்டில் இவான் கெர்ஷ்கோவிச்: ரஷ்யாவில் பிறந்த அமெரிக்க பத்திரிகையாளர் ரஷ்யச் சிறையில்!



● ஐங்கரன் விக்கினேஸ்வரா

ரஷ்யாவை உளவு பார்த்ததாக கைது செய்யப்பட்டுள்ள அமெரிக்க ஊடகவியலாளர் இவான் கெர்ஷ்கோவிச் அமெரிக்க 'தி வால் ஸ்ட்ரீட் ஜர்னலில்' (Wall Street Journal) ரஷ்யாவில் பணியாற்றிய நிருபர் ஆவார்.

அவர் மார்ச் 2023 இல் உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் ரஷ்யாவின் மத்திய பாதுகாப்பு அமைப்பால் (பெடரல் செக்யூரிட்டி சர்வீஸால்) முதலில் தடுத்து வைக்கப்பட்டார்.

சோவியத் யூனியன் கலைக்கப்பட்டு 35 ஆண்டுகளுக்குப் பின்னரான பனிப்போருக்குப் பிறகு ரஷ்யாவில் உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் அமெரிக்கப் பத்திரிகையாளர் கைது செய்யப்பட்டமை இதுவே முதல் முறையாகும். இந்தக் கைதுக்கு வெள்ளை மாளிகை பலத்த கண்டனம் தெரிவித்தது.

**உக்ரைன் போரால் மீள பனிப்போர்:**

உக்ரைன் போரால் ரஷ்யா - அமெரிக்கா இடையே பனிப்போர் மீள நிலவும் சூழலில், ஊடகவியலாளரின் கைது இரு நாட்டு அரசியலில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவான் கெர்ஷ்கோவிச் மீது, ரஷ்யா குறித்து ரகசிய தகவல்களை உளவு பார்த்ததாக ரஷ்யப் புலனாய்வாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆயினும் கெர்ஷ்கோவிச் முறைப்படி குற்றம் சாட்டப்பட்டது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

31 வயதான அமெரிக்கச் செய்தியாளர் இவான் கெர்ஷ்கோவிச்(Evan Gershkovich) மீது ரஷ்ய ஆயுத உற்பத்திக் கூடத்தில் உளவு பார்த்ததாக ரஷ்யா குற்றம்சாட்டியது. ஆனால், அமெரிக்காவின் நிருபரான இவான் கெர்ஷ்கோவிச் அந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

**பனிப்போருக்குப் பிறகு உளவு பார்த்த குற்றம்:**

தூதரகத்துக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் பற்றிய தூதரக அணுகல், மொஸ்கோவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இவான் கெர்ஸ்கோவிச் யூரல் மலைப்பகுதியின் யெகாடரின்பர்க் பகுதியிலிருந்து கைது செய்யப்பட்டதாக எஃப்எஸ்பி (The Federal Securiy Service) எனப்படும் ரஷ்ய உளவுப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

கெர்ஷ்கோவிச் ரஷ்யாவில் தவறாகக் காவலில் வைக்கப்பட்டதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்க அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் நிர்வாகம் தயாராகி வருகிறது.

சோவியத் பனிப்போருக்குப் பிறகு உளவு பார்த்ததாகக் கூறி கைது செய்யப்பட்ட முதல் அமெரிக்கப் பத்திரிகையாளரின் குற்றம் உறுதி செய்யப்பட்டால் இவான் கெர்ஸ்கோவிச் 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அனுபவிக்கக்கூடும்.

**20 ஆண்டு சிறைத்தண்டனை:**

இவான் கெர்ஷ்கோவிச் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் வரை, மேல்முறையீட்டு வழக்கு மொஸ்கோ நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது.

தம்முடைய ஊழியர் உளவு பார்த்ததாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டை நிராகரித்துள்ள Wall Street Journal பத்திரிக்கையும், வெள்ளை மாளிகையும் அவரை உடனே விடுதலை செய்யும்படி வலியுறுத்தின.

கெர்ஷ்கோவிச் 2016 முதல் 2017 வரை தி நியூயார்க் டைம்ஸ், 2017 முதல் 2020 வரை தி மாஸ்கோ டைம்ஸ் மற்றும் ஜனவரி 2022 இல் தி வால் ஸ்ட்ரீட் ஜர்னலுக்குச் செல்வதற்கு முன்பு 2020 முதல் 2022 வரை ஏஜென்ஸ் பிரான்ஸ்-பிரஸ்ஸில் பணியாற்றினார்.

அவர் கைது செய்யப்படுவதற்கு முன் ஆறு ஆண்டுகள் ரஷ்யாவில் வசித்து வந்தார், அப்போது அவர் மொஸ்கோவில் இருந்து உக்ரைனில் நடந்த போரைப் பற்றிய செய்திகளை வெளியிட்டார். அவர் யெகாடெரின்பர்க்கில் பணிபுரிந்து கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டார்.

**ரஷ்யாவில் சுதந்திர ஊடகம் :**

சுதந்திர ரஷ்ய ஊடகவியலாளர்கள் மத்தியில் மதிப்பிற்குரிய நபரான கெர்ஷ்கோவிச் கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் ரஷ்ய ஊடகங்களும் கண்டனத்தை எழுப்பியுள்ளன. ரஷ்யாவின் முன்னணி சுதந்திர ஊடகவியலாளர்கள் அவரை விடுவிக்கக் கோரி ஒரு நீண்ட கடிதத்தை வெளியிட்டனர்.

**கெர்ஷ்கோவிச்சை விடுவிப்பது ஜோ பைடனுக்கு முன்னுரிமை:**

கெர்ஷ்கோவிச்சின் கைதுக்கான உத்தரவின் பின்னணியில் அமெரிக்க சிறையில் உள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயர்மட்ட ரஷ்யர்களுக்கு கைதிகள் பரிமாற்றம் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அரசியல் நிபுணர்கள் ஊகித்துள்ளனர்.

உக்ரைன் படையெடுப்பைத் தொடர்ந்து ரஷ்யாவில் தங்கியிருந்த கெர்ஷ்கோவிச், 2023 இல் கைது செய்யப்பட்ட பின்னர் டைம் இதழால் உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 நபர்களில் ஒருவராக பெயரிடப்பட்டார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரபூர்வமாக கெர்ஷ்கோவிச்சை தவறாகக் காவலில் வைத்துள்ளனர் என்று அறிவித்தது. அத்துடன் அவரது வழக்குப் பணயக்கைதிகள் விவகாரங்களுக்கான சிறப்புத் தூதுவரின் அலுவலகத்துக்கு மாற்றப்படும் என்றும் அறிவித்தது.

கெர்ஷ்கோவிச்சின் கைது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று வெள்ளை மாளிகை கூறியுள்ளது. திரு. கெர்ஷ்கோவிச்சைக் காவலில் வைத்திருப்பதை அமெரிக்கா கடுமையாகக் கண்டிக்கிறது என்றும்

கெர்ஷ்கோவிச்சை விடுவிப்பது ஜோ பைடனுக்கு முன்னுரிமை என்றும் அமெரிக்கா கடுந்தொனியில் கூறியுள்ளது.





அ.முத்துக்கிருஷ்ணன்

# களித்திருத்தலும் உள்ளூர் மதுபானங்களும்

தமிழ்நாட்டின் கள்ளக்குறிச்சிப் பகுதியை சேர்ந்த கருணாபுரத்தில் சாராயம் அருந்தியவர்களில் 61 பேர் மரணமடைந்ததோடு, 150க்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்த நிலையில் தமிழ்நாடும் சாராயமும் என்கிற தளத்தில் மீண்டும் ஒரு பெரும் விவாதம் எழுந்துள்ளது, ஒவ்வொரு முறையும் இவ்வாறான சாராய மரணங்களின் போது சமூகத்தில் பெரும் கொந்தளிப்பான மனநிலை ஏற்படும், உடனடியாக பூரண மதுவிலக்கு என்கிற எல்லை வரை விவாதங்கள் செல்லும்.

இந்த மரணங்களின் காரணங்களை அறிந்துகொள்ள நாம் உண்மையாகவே விரும்பினால் முதலில் இந்திய நிலத்தில் போதைவஸ்துக்களின் வரலாற்றை அறிந்துகொள்ள வேண்டும். உலகம் முழுவதுமே ஒவ்வொரு நிலத்திலும் விளையும் பொருட்களின் உபரியை கொண்டு விதவிதமாக மது வகைகளை மக்கள் காலம் காலமாக உற்பத்தி செய்து வருகிறார்கள். இந்தியாவிலும் நீங்கள் ஒரு சுற்று வந்தீர்கள் என்றால் ஏராளமான புதிய புதிய மது வகைகளை பார்க்கலாம், இவை எல்லாம் அந்த அந்த நிலத்தின் மக்களின் வாழ்வுடன் ஐக்கியமானவை.

அரிசி மிகுதியாக விளைகிற வங்கத்தில் பாங்களா என்கிற பானம் மிகவும் பிரபலம், கோவாவிற்கு நீங்கள் ஒரு பயணம் செய்தால் அங்கே முந்திரி பழத்தில் இருந்து வடிக்கப்படுகிற பெனியும் தென்னங்கள்ளும் மக்களின் அன்றாடம் பருகும் பானங்களாக உள்ளன. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களுக்கு சென்றால் அங்கே ஒவ்வொரு பகுதியிலும் விதவிதமாக உள்ளூர் பானங்கள் கிடைக்கின்றன. அரிசியில் இருந்து தயாரிக்கப்படும் போரோ அபோங் வடகிழக்கில் மட்டுமே கிடைக்கும். திரிபுராவில் பலாப்பழத்தில் இருந்து வடிக்கப்படுகிற சாவுராக் அவர்களின் பிரிய பானம், மேகாலயாவில் கியாத் என்கிற அவர்களின் உள்ளூர் பியர் போன்ற ஒரு புளித்த பானம். திபெத், நேபாளத்தில் உருவாகி ஒரு அற்புதமான மதுவகையாக சாங்க் இந்தியாவின் வடகிழக்கு மாகாணங்களில் கிடைக்கிறது, மகாராஷ்திரத்தில் இலுப்பை பூ, முந்திரி, ஆரஞ்சுப்பழத்தில் இருந்து தயாரிக்கப்படும் விதவிதமான பானங்கள் கிடைக்கும். தெலுங்கானாவில் மாம்பழம், வெல்லம் போட்டு தயாரிக்கப்படும் குடம்பாவை நீங்கள் ருசிக்கலாம். பிகார், ஒடிசா, மத்திய பிரதேசம், ஜார்கண்டு, சத்தீஸ்கர் என எங்கு சென்றாலும் ஹண்டியா கிடைக்கும். ஹிமாச்சலத்தில் லுக்டி, லடாக் பகுதியில் மட்டுமே கிடைக்கும் அரக், சிறுதானியங்களில் இருந்து செய்யப்படும் தோங்கா டார்ஜீலிங், சிக்கிம் பகுதிகளில் கிடைக்கும், குஜராத், ராஜஸ்தான் பகுதிகளில் கிடைக்கும் சோய்சோ, இப்படி இந்தியா முழுவதும் அந்த அந்த நிலத்தின் விளையும் பானங்கள் கிடைக்கும் . அவற்றைக் குறித்து தனியே ஒரு புத்தகமே எழுதலாம்.

இந்தியாவில் மட்டும் அல்ல உலகம் முழுவதுமே இது தான் வாடிக்கை. ரஷ்யாவில் உருளைக்கிழங்கில் இருந்த வோட்கா, கொரியாவில் சோஜூ, ப்ராசில் நாட்டில் சாச்சா, அமெரிக்காவின் பார்பன், பெரு நாட்டின் பிஸ்கோ, சீனாவின் மவோதாய், மெக்சிக்கோவின் டெக்கிலா, துருக்கியில் ராக்கி, ஸ்பெயின் நாட்டின் சாங்கிரியா, ஜோர்தன் நாட்டின் அரக், இங்கிலாந்தின் ஜின், ஸ்காட்லாண்டின் விஸ்கி, நேபாளத்தின் ராக்ஷீ, ஆஸ்திரேலியாவின் டாஸ்மேனிய அத்திப்பழ ஜின் வகைகள், விக்டோரியா பிட்டர், பேல் ஏல், சுல்லிவன் விஸ்கி, ஹார்டீஸ் வைன், கும்முலஸ் வைன் என இந்தப் பட்டியலை விரிவுபடுத்தினால் ஒரு இரண்டாயிரம் பானங்களின் பெயர்களின் தொகுப்பாக அது மாறும்.

இந்தியாவின் ஒவ்வொரு திருவிழாவிலும் பிரத்யேக நடைமுறையில் உள்ளது. கஞ்சாச் செடியில் இருந்து தயாரிக்கப்படுகிற பாங் என்கிற பானம் இல்லாமல் ஒரு திருவிழாவும் ஒரு விசேஷமும் நடைபெறாது. இந்து மத்தின் முக்கியமான கடவுளாக விளங்கும் சிவனின் விருப்பமான செடியாக கஞ்சாச் செடி கருதப்படுகிறது. இந்துமதத்தின் நான்கு வேதங்களில் ஒன்றான அதர்வண வேதத்தில், உலகின் மிகவும் புனிதமான ஐந்து தாவரங்களில் ஒன்றாக கஞ்சாச் செடியும் பார்க்கப்படுகிறது. இந்தத் தாவரம் மகிழ்ச்சியின் ஆதாரமாக, விடுதலையின் கருவியாக விவரிக்கப்படுகிறது.

வாராணாசியில் சாமியார்கள் பாங்கு குடிக்கும் அல்லது சிலும்பியில் வைத்து கஞ்சா குடிக்கும் காட்சிகளை நீங்கள் சர்வசாதாரணமாகப் பார்க்கலாம். இப்படி உலகம் முழுவதிலுமே அந்தந்த மக்களின் கலாசாரத்தின் ஒரு பகுதியாகவே மது வகைகள் இருந்து வருகின்றன என்கிற அடிப்படைப் புரிதல் அவசியமானது. இந்தியா முழுவதுமே கடவுளுக்கு படைக்கப்படும் படையலில் சுருட்டும், சாராயமும், கஞ்சாவும் வைப்பது வழிபாட்டின் ஒரு பகுதியாகவே இருந்து வருகிறது.

இந்த சூழலில் தான் நம்முடைய நிலத்தின் பானங்கள் எல்லாம் தடை செய்யப்பட்டு, இங்கே வெளிநாட்டு வகை சாராய வகைகள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட மது வகைகளாக விற்கப்பட்டு வரும அவலநிலை நிலவி வருகிறது. இந்த மது வகைகளை தயாரிக்கிற Indian-made foreign liquor (IMFL) என்கிற பெரும் தொழில் கூட்டு தான் தமிழகத்தின் பெரும் சாபக்கேடுகளின் தொடக்கப் புள்ளியாக உள்ளது. இந்த வெளிநாட்டு வகை சாராய வகைகள் தான் தமிழகத்தின் டாஸ்மாக் மூலம் விற்பனை செய்யப்படுகிறது, இவைகள் அனைத்துமே விலை அதிகமானவை, தினசரி கடுமையான உடல் உழைப்பை செலுத்தி வேலை செய்யும் எளிய தொழிலாளர்கள் வாங்கக்கூடிய அளவில் இதன் விலைகள் ஒருபோதும் இருந்ததில்லை. ஒரு தொழிலாளி ஒரு நாளில் 600 முதல் 1000 ரூபா வரை வருமானமாக ஈட்டுகிறார் என்றால், அவர் இந்த டாஸ்மாக் கடைக்கு சென்றால் அளவாக குடிப்பவராக இருந்தாலும் கூட குறைந்தது 300- 500 வரை செலவாகும், அவர் நன்றாகக் குடிப்பவர் என்றால் இந்த 1000 ரூபாவும் காணாமல் போகும். தமிழ்நாட்டின் மிக அருகில் இருக்கும் கேரளா மாநிலம் முழுவதுமே கள்ளுக்கடைகள் உள்ளன, அங்கே இன்றைக்கும் 750 மி.லீ. கள்ளு ரூ.70 க்கு விற்பனை செய்யப்படுகிறது, இந்தக் கள் கேரளாவில் ஏழைகளின் 'ஸ்காட்சாக' அழைக்கப்படுகிறது.

தமிழகத்தில் தென்னை, பனை ஆகிய இரண்டு விதமான கள் இறக்கி அருந்துவதற்கான வாய்ப்புள்ளது ஆனால் இவை தமிழகத்தில் தடை செய்யப்பட்டுள்ளன, அதே போல் இங்கே காய்ச்சப்படும் சாராய வகைகளும் தடை செய்யப்பட்டுள்ளன. எளிய உழைக்கும் மக்களால் வெளிநாட்டு வகை டாஸ்மாக் சரக்குகளை வாங்க முடியாத போது தான் அவர்கள் இப்படி இங்கே காய்ச்சி விற்பனை செய்யப்படும் உள்ளூர் சாராயங்கள் நோக்கி வலுக்கட்டாயமாக தள்ளப்படுகிறார்கள். வெளிநாட்டு வகை சாராயங்கள் எல்லாம் அங்கீகரிக்கப்பட்டவையாகவும் , உள்ளூர் பானங்கள் சட்டவிரோதமானவையாக, கள்ளச்சாராயமாகவும் பார்க்கப்படும் அவல நிலை உலகில் வேறு எங்கும் இல்லை.

இந்தச் சூழலில் தான் உள்ளூர்ச் சாராயம் காய்ச்சுபவர்கள் மத்தியில் யார் காய்ச்சும் சாராயத்தில் போதை அதிகம், யார் இந்தச் சந்தையைக் கைப்பற்றுவது என்கிற தொழில் போட்டியில் சாராயத்தில் பல வகை வேதிப்பொருட்களைக் கலக்கிறார்கள், கள்ளக்குறிச்சியில் மெத்தனால் கலந்ததால் தான் இன்றைக்கு இந்த விபரீதம் ஏற்பட்டுள்ளது.

கள்ளச்சாராயத்தை தடுத்து நிறுத்தும் பொறுப்பு தமிழ்நாடு மதுவிலக்கு 'கலால்' பிரிவு என்கிற தமிழ்நாடு காவல்துறையின் முக்கியமான துறையின் கீழ் வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் கள்ளச்சாராயத்துக்கு எதிரான நடவடிக்கையில் 4 லட்சத்து 60 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அரசின் புள்ளிவிபரம் தெரிவிக்கிறது. கைது செய்யப்பட்டவர்களில் 565 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் ஒரு அறிக்கை தெரிவிக்கிறது.

உலகம் முழுவதும் உள்ள 192 நாடுகளில் 10 நாடுகளில் மட்டுமே அமுலில் உள்ளது, இந்தியாவில் 5 மாநிலங்களில் மதுவிலக்கு சட்டம் பெயரளவில் உல்லது ஆனால் அங்கே மூலை முடுக்கெல்லாம் மது கிடைக்கவே செய்கிறது என்கிற உண்மையை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

எளிய மக்கள் குடிக்கும் வகையில் உள்ளூர் பானங்களை Indian-made foreign liquor (IMFL) போலவே Country Made Local Liquor என்கிற தனித்த அமைப்புகளை உருவாக்கி உற்பத்தி செய்யும் உரிமங்களை அரசு வழங்கினால் தான் இந்தப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வரும்.

ஆஸ்திரேலியாவில் மது விலக்கு என்கிற ஒன்றைப் பேசினால் மக்கள் சிரிப்பார்களோ அப்படியே உலகம் முழுவதும் மது விலக்கு என்பதை நகைப்புடன் தான் பார்ப்பார்கள். தமிழகத்தில் மட்டும் இப்படியான முட்டாள்தனமாக வாதங்களை ஊடக வெளிச்சத்தில் பலர் முன்வைக்கிறார்கள். கள்ளக்குறிச்சியை தொடர்ந்து கள்ளச்சாராயம் தொடர்பான சட்டங்கள் இன்னும் கடுமையாக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. காய்ச்சுபவர்கள் மீது மட்டும் அல்ல கச்சிதமாக இந்த லாபத்தில் பெரும் பகுதியை வாங்கும் காவல்துறையினர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கள்ளச்சாராயத்தை நல்ல சாராயமாக உரிமங்கள் கொடுத்து காய்ச்சி, தென்னங்கள்ளை, பனங்கள்ளை அங்கீகரிக்கப்பட்ட இந்த நிலத்தின் பானங்களாக முறைப்படுத்தினாலே ஒழிய இந்தச் சாராயச் சாவுகளை தடுக்க இயலாது, இலங்கையில் கொழும்பு விமான நிலையம் தொடங்கி யாழ்ப்பாணம் வரை எங்கும் நீங்கள் தென்னஞ் சாராயம் வாங்கலாம், அதிவிசேசம் வாங்கலாம். இதுவே ஆரோக்கியமான முறை. இலங்கை மற்றும் கேரளாவில் இருந்து தமிழ்நாடு பாடம் கற்க வேண்டும், உள்ளூர் மக்களுக்கு மட்டும் அல்ல நம் நிலத்தின் மது வகைகள் வெளிநாடுகள் வரை செல்ல வகை செய்தல் வேண்டும்

# அகம், புறம், சங்க(ம)ம்

## எம்மனோரில் செம்மலும் உடைத்தே




ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

**1992** ஆம் ஆண்டு பிரசாந்த் மற்றும் ரோஜா நடிப்பில் வெளிவந்த தமிழ்த் திரைப்படமான செம்பருத்தியில் ஒரு காட்சி வரும். நமது தமிழ் சமூகத்தில் நிலவிவரும் வர்க்க பேதத்தை மிக நன்றாகக் காட்டியிருப்பார்கள். அதாவது இந்தத் திரைப்படத்தில் நிலப்பிரபுத்துவ குடியில் பிறந்த பணக்காரரான பிரசாந்த் தனது வீட்டில் வேலைபார்த்துவரும் மீனவர் குலத்தில் பிறந்த மற்றும் ஏழையான ரோஜாவைக் காதலிப்பார் . மீனவர் குலப்பெண் ஏன் வீட்டு வேலை பார்க்கிறாள் என்றெல்லாம் கேட்கக்கூடாது . தமிழ் சினிமாவில் இப்படியெல்லாம் இருக்கத்தான் செய்யும் .பேரனின் காதலையறிந்த பிரசாந்தின் பாட்டியான பானுமதி, ரோஜாவையும் அவரது அண்ணனான ராதாரவியையும் மிகக் கேவலமாகத் திட்டி அனுப்பிவிடுவார் . அப்பொழுது ராதாரவி ," நீங்கள் பணக்காரர் என்று வாய்க்கு வந்தபடி பேசவேண்டாம். எங்கள் குலமும் உங்களைவிட பெரிய குலம் தான் .என் தங்கையை திருமணம் செய்ய எங்களிடமும் தகுதியானவர்கள் இருக்கிறார்கள்" என்று சூளுரைப்பார். அதன் பிறகு தனது தங்கைக்கு மன்சூர் அலிகானை திருமணம் நிச்சயம் செய்து திரைப்படம் பல்வேறு சண்டையெல்லாம் நடந்து, தமிழ் சினிமாவின் விதிகளுக்கேற்ப சுபத்தில் முடிவுக்கு வரும் . நான் சொல்லவந்த விஷயமென்னவென்றால், ராதாரவி தனது குலப்பெருமையை சிறிதும் விட்டுக்கொடுக்காமல் பணக்காரரான பானுமதியை பார்த்து சவால் விடுவதும், கடலில் அலைந்து மீன்பிடிக்கும் நாங்கள் உங்களை விட எந்தவிதத்திலும் குறைந்தவர்கள் இல்லை என்று வாதம் செய்வதும் தான்.

இதேபோன்று சங்ககாலத்திலும் தலைவன் தனது நிலப்பகுதியிலிருந்து மற்றோர் நிலப்பகுதிக்கு சென்று அங்கு வாழும் தலைவியிடம் காதல் கொள்வது இயல்பு. அதாவது குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்து வரும் தலைவன் நெய்தல் நிலத்தில் காதல் கொள்கிறான். இதைக் கண்டு தலைவியின் தோழி பயப்படுகிறாள் . எங்கே தலைவன் தலைவியை காதலித்து ஏமாற்றிவிடுவானோ ? இல்லை தலைவியை தவிக்கவிட்டுவிட்டு சென்றால் நாம் எங்கே சென்று அவனைத் தேடுவது. அவனது நிலமும் ,குடியும் நமக்கு தெரியாது. நமது குல பழக்க வழக்கங்கள் ,உணவுமுறை ,பண்பாடு எல்லாம் தலைவனின் நிலத்தோடு ஒப்பிடும்போது நிறைய வேற்றுமைகள் உள்ளன. எப்படி இதெல்லாம் ஒத்துவரும். இப்போதுள்ள காதல் தீர்ந்துபோனால் அதன்பிறகு வேற்றுமைகள் தானே கண் முன்னே தெரியும். அப்பொழுது இவர்கள் இருவரிடமும் பிரச்சினைகள் முற்றி பிரிவுக்கு தானே வழிவகுக்கும் .அந்த பிரிவினை தலைவி எவ்வாறு தாங்கிக்கொள்வாள் என்பதை உணர்ந்த தோழி தலைவனை பார்த்து பாடியதாக வரும் சங்கப்பாடலாகும்.

இவளே, கானல் நண்ணிய காமர் சிறுகுடி,  
நீல் நிறப் பெருங் கடல் கலங்க உள்புக்கு  
மீன் எறி பரதவர் மகளே நீயே,  
நெடுங் கொடி நுடங்கும் நியம மூதூர்க்  
கடுந் தேர்ச் செல்வன் காதல் மகனே:  
நிணச் சுறா அறுத்த உணக்கல் வேண்டி,  
இனப் புள் ஒப்பும் எமக்கு நலன் எவனோ?  
புலவு நாறுதும் செல நின்றீமோ!



பெரு நீர் விளையுள் எம் சிறு நல் வாழ்க்கை  
நும்மொடு புரைவதோ அன்றே  
எம்மனோரில் செம்மலும் உடைத்தே

\- நற்றிணை

**பாடியவர் :** பெயர் தெரியவில்லை

**பாடல் பின்னணி -** தலைவியைக் கவர பரிசுடன் வந்து நின்ற தலைவனுக்கு தோழி தலைவியின் நிலையை எடுத்துக் கூறுவது.

**நெய்தற் திணை -** இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

இவளோ( தலைவி ), நீலம் பரந்த கடலின் உள்ளே சென்று மீன் கொண்டுவரும் கடலை நம்பி வாழும் பரதவர் மகள். நாங்கள் கடலை அடுத்துள்ள மணல் பரந்த கானல் நிலத்தில் உள்ள சிறுகுடியில் வாழ்கிறோம். நீயோ (தலைவன் ), வெற்றிக்கொடி கட்டிப் பறக்கும் , பரபரப்பான கடைத்தெரு கொண்ட பெரிய ஊரில் பெருந்தேர் கொண்டு சீமையெல்லாம் ஆண்டுவரும் செல்வம் படைத்த பெரு மகனின் மகன். நாங்களோ( நெய்தல் நிலம் சார்ந்த மீனவர்) சுறாமீன் துண்டங்களைக் காயவைத்துக்கொண்டு அதனைக் கவர வரும் பறவைகளை கையால் ஓட்டிக்கொண்டு வாழும் சிறு வாழ்க்கை வாழ்ந்து வருகிறோம் . எங்களுக்கு நீ தரும் (தலைவியைக் கவர்வதற்கு ) பரிசுப்பொருளான அணிகலங்கள் எல்லாம் வேண்டாம்? இங்கே புலால் கவிச்சல் நாற்றம் அடிக்கிறது. பக்கத்தில் வரவேண்டாம். உங்களுக்கு இந்த வாடையெல்லாம் ஒத்துக்கொள்ளாது. தூரத்திலேயே நில்லுங்கள் ஐயா. கடலில் கிடைக்கும் மீன்களை விற்பனை செய்தோ அல்லது உணவாக உண்டு வாழும் வாழும் எங்களின் இந்தச் சிறிய எளிய வாழ்க்கை உனக்கு ஒத்துவராது. அப்படிச் சொல்வதால் எங்கள் வாழ்க்கை ஒன்றும் குறைந்தது கிடையாது. எங்களிடமும் உன்னைவிட தகுதியுடைவர்களும் உண்டு.

இந்தப் பாடலின் மூலம் நாம் தெரிந்து கொள்ள வேண்டியதென்னவென்றால் இப்போது மட்டுமில்லை சங்க காலத்திலும் கூட வர்க்கப்பிரிவினைகளும் ,அது சார்ந்த பிரச்சினைகளும் இருந்திருக்கின்றன . ஒரு நிலத்தை சேர்ந்தவர் இன்னொரு நிலத்தை சேர்ந்தவரை துணையாகக் கொள்ளத் தடை இருந்திருப்பதை இந்த நற்றிணைப் பாடல் சுட்டிக்காட்டுகிறது. காதலுக்கு கண் ,சாதி ,மதம் இல்லை என்று சொன்னாலும் இயல்பில் எத்தனையோ சிக்கல்கள் இருக்கத்தானே செய்கின்றன. வேறு வேறு குலம் / இன / மொழி சார்ந்தவர்கள் மணமுடித்து வாழும்போது எத்துணை சிக்கல்கள் வருகின்றன . பழக்கவழக்கங்கள் , பண்பாடு , உணவு, மொழி,உடை மற்றும் அந்தஸ்து சார்ந்த எததனையோ வேறுபாடுகள் எத்தனையோ சிக்கல்கல்களுக்கு இட்டுச் செல்கின்றன .

எழுத்தாளர் அ. முத்துலிங்கத்தின் அங்கே இப்போ என்ன நேரம்? என்ற கட்டுரை நூலில் நடிகை பத்மினியுடனான சந்திப்பு பற்றிய கட்டுரையின் தலைப்பு "நீங்கள் ஏன் சிவாஜியை கல்யாணம் செய்துகொள்ளவில்லை?" . கனடாவில் நிகழ்ந்த ஒரு நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக பத்மினி சென்றபொழுது அ. முத்துலிங்கத்தின் வீட்டில் தங்கியிருந்த நாட்களை பற்றி அந்தக் கட்டுரையில் எழுதியிருக்கிறார் . விமான நிலையத்திலிருந்து பத்மினியை அழைத்துக்கொண்டு அ.முத்துலிங்கம் காரில் பயணிக்கும் பொழுது அவருடன் பத்மினியை வரவேற்க வந்திருந்த பெண்மணி ஒருவர் கேட்ட கேள்வி தான் "நீங்கள் ஏன் சிவாஜியை கல்யாணம் செய்துகொள்ளவில்லை?". முத்துலிங்கத்திற்கோ அதிர்ச்சி .ஆனால் பத்மினியோ வேறேங்கோ தூரத்தில் நிலை கொள்ளும் பார்வையுடன் அந்தக் கேள்வியை எதிர்கொண்டு, மௌனத்தையே பதிலாக அளித்திருக்கிறார். பத்மினி கனடாவில் தங்கியிருந்த மூன்று நாட்களில் அவரைச் சந்திக்க வந்திருந்த ஏராளமான நபர்களும் கொஞ்சம் கூட இங்கிதம் இல்லாமல் மறுபடி மறுபடி அதே கேள்வியை திரும்பக் கேட்கிறார்கள் . அவர்களில் ஒருவருக்கும் பத்மினி பதில் சொல்லவில்லை . வேறேதோ சந்தர்ப்பத்தில் சுவாரஸ்யமாக பேசிக் கொண்டிருக்கையில் அவருடைய சம்பாஷணை எங்கோ தொடங்கி எங்கோ தொட்டுத் தொட்டுச் செல்கிறது. திடீரென்று சொன்னார், 'நான் நாயர் பொண்ணு, அவர் கள்ளர் ஜாதி, நடக்கிற காரியமா?' என்று .

பிரபலமான ,வசதி படைத்த நடிகர் சிவாஜி - பத்மினிக்கே இந்த சாதி பேதம் தடையாக இருக்கிறதென்றால் சாமான்யர்களான நாமெல்லாம் எம்மாத்திரம்.


கேசி தமிழ் மன்றம்
வழங்கும்
கூழும், கொழுக்கட்டையும்
உண்டு மகிழ்ந்திடும்
ஆடிப் பிறப்பு விழா
2024
FREE ENTRY
தலைவாழை இலையில் திகட்டாத
சைவ விருந்துடன்!
ஆடிக்கூழ், கொழுக்கட்டை, வாழையிலை விருந்து,
கலை நிகழ்வுகள், இளவேனில் சஞ்சிகை.
Getting EOI on all categories.
Participating in programmes | Volunteers | Stalls
Sunday
21st July 2024
Time : 3.00 pm - 8.00 pm
TICKETS
Scan Me
@ Springvale City Hall
18 Grace Park Ave,
Springvale VIC 3171
Book your ticket @ www.trybooking.com/CRETK
CONTACT : 0403 436 970
0412 069 096
Supported by:
THE MANGO TREE
Tantalizing your Taste Buds
VICTORIA

Transco™ CARGO




# ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

- ONLINE TRACKING
- SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
- LIVE CHAT ON WEBSITE
- TRANSCO APP

*We love to deliver*

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
**Dandenong South**
**(03) 9703 2255**

45 Adrian Rd
**Campbellfield**
**(03) 9357 7228**

SYDNEY - **02 9897 0004**
PERTH - **08 9452 7707**
BRISBANE - **07 3219 0203**
CANBERRA - **02 62821905**
TASMANIA - **03 90174167**
ADELAIDE - **08 8322 8825**
DARWIN - **08 79790002**

**1300 1 TRANSCO** (1300 187 267)
**WWW.TRANSCOCARGO.COM.AU**